www.padippakam.com



# புதிய கண்ணோட்டம்

Registered as a Newspaper at the G.P.O (QD/79/News/94)

வெளியீடு: 5 01 மாசி 1994 விலை: ரூபா ஐந்து

### இராணுவத்தின் இயக்கத்தில் அரசாங்கம் தயாரித்து வழங்கும் உள்ளூராட்சித் தேர்தல் நாடகம்

# பம்மாத்து

- எல்லா இடங்களிலும் ஆட்களைப் பலவந்தமாகக் கடத்தி வேட்பாளர்களாக்கப்பட்டு மனுத்தாக்கல்.
- சென்னை அகதி முகாமிலிருப்பவர் பெயரும் கள்ளக் கையெழுத்துப் போடப்பட்டு வேட்பாளர் பட்டியலில்.
- STF பாசறைகளிலேயே வேட்பாளர்கள் இரவுத் தூக்கம். வாக்குக் கேட்டு வருபவர்களைக் கண்டு மக்கள் ஓட்டம்.
- வேட்பு மனுத்தாக்கலிலேயே இத்தனை மோசடி என்றால், தேர்தல் வாக்களிப்பு நேரம் எத்தனை மோசடி?
- சொந்தப் பெயரில் மக்களிடம் போகமுடியாத சில தமிழ்க் கட்சிகள் சுயேட்சைக் குழுக்களாக மாறுவேடத்தில்.
- தேர்தல் நாள் நெருங்க நெருங்க இன்னும் பல மக்களை ஏமாற்றும் தந்திரக் காட்சிகள் உண்டு.

ஒருபக்கம் பாரிய யுத்தம், நூற்றுக் கணக்கான இராணுவம் பலி, பல கோடி பெறுமதியான இராணுவ உபகரணங்கள் இழப்பு, மறுபுறம் அகதிகளாகச் சென்றோர் பூரணமாக மீளக்குடியேற முடியாத நிலை, இன்னும் பல லட்சக்கணக்கான தமிழ் மக்கள் நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் அகதிகளாகி அகதிமுகாம்களில் சீவியம். இதைவிட வரலாற்றில் இல்லாத பெரு வெள்ளத்தில்பாதிக்கப்பட்டு பல ஆயிரக் கணக்கான மக்கள் உள்ளவற்றையும் இழந்து மீண்டும் அகதிநிலைமை. இவ்வளவு இன்னலுக்கு மத்தியிலும் அரசாங்கம் உள்ளூராட்சித் தேர்தலை நடாத்துகின்றது என்றால் அதன் பின்னணியில் இருக்கின்ற அரசின் சூழ்ச்சியை தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அடிப்படையில் இலங்கையில் பூர்வீகமாக வாழக்கூடிய வடக்குக்கிழக்குவாழ் தமிழ்மக்களைப் பிரித்து, கிழக்கு மாகாணத்தைப் படிப்படியாக சிங்களமயமாக்க வேண்டும் என்ற அடிப்படையில், அரசாங்கமும் சிங்கள இன வெறியர்களும்செயற்பட்டுவருவதை நாம்முதலில் அறியவேண்டும்.


இலங்கையின் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி அவர்கள் மிகவும் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் ஒரு விடயத்தை மீண்டும்மீண்டும்வலியுறுத்தி வருகின்றார். அதாவது, உள்ளூராட்சிச் சபைத்தேர்தலைத்தொடர்ந்து, வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதற்கான சர்வசனவாக்கெடுப்பு ஒன்றை, தான் கிழக்கில் நடத்தவிருப்பதாகக் குறிப்பிட்டு வருகின்றார். இதனை எதிர்க்கவேண்டியதும் கண்டிக்கவேண்டியதும் ஒவ்வொருதமிழரின்கடமையாகும். இச்சர்வசன வாக்கெடுப்புக்கு ஒரு முதற்படியாகத்தான் நாம் இப்பிரதேசசபைத் தேர்தலை நடாத்துகின்றோம் என்று ஜனாதிபதி கூறியபின்னரும்கூட அதற்கு எந்த வித எதிர்ப்பையும்தெரிவிக்காமல் உள்ளூராட்சிச்சபைத்தேர்தலில்கலந்துகொள்வது என்பது, தமிழ்மக்களின் நலன்களை அடகுவைத்து தமதுசுயநலநோக்கங்களைநிறைவேற்றிக்கொள்வதற்கான ஓர் தீர்மானமாகவே தோன்றுகின்றது.

தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும்வடக்குக்கிழக்கில் நாம்இணைந்து வாழ வேண்டும் என விரும்புகின்றோம். அரசாங்கமோ, அப்படியெல்லாம் முடியாது வடக்கும் கிழக்கும் பிரிந்துதான் இருக்க வேண்டும் என வலியுறுத்துவதுடன் அப்படியான சூழ்நிலையை ஏற்படுத்தவும் மிகவும் கபடத்தனமான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. இவ்வுள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களும் அதன் நோக்கமாகவே நடத்தப்படுகின்றதுஎன்றே நாம்கருதுகின்றோம். கிழக்கு மாகாணத்தில் சிங்கள தமிழ் முஸ்லிம் மக்கள் ஏறத்தாழ சமஅளவில்வாழ்கின்றார்கள் என்றும், அங்கிருக்கக்கூடிய சிங்கள முஸ்லிம் மக்களுக்கு இணைப்பில் விருப்பமில்லை எனவும், இதனால் வடக்கையும்கிழக்கையும் இணைக்கமுடியாதுஎனவும், அப்படி இணைக்கவேண்டுமாயின் கிழக்கில் சர்வசனவாக்கெடுப்பை நடத்தவேண்டுமெனவும் அரசாங்கம் வலியுறுத்தி வருகின்றது. உண்மைக்குப்புறம்பான அரசின் இக் கபடத்தனமான விடயங்களை தமிழ் மக்கள் தெளிவாக இனங்கண்டு கொள்ள வேண்டும்.

வடக்கிலிருந்து கிழக்கு பிரிக்கப்பட்டால் தமிழ் மக்கள் அங்கு சிறுபான்மையாக்கப்பட்டு தமிழ் இனமே முற்றுமுழுதாக அழித்தொழிக்கப்பட்டுவிடும். இந்த நோக்கத்தினைக் கருத்திற்கொண்டே வடக்கையும் கிழக்கையும் பிரிக்க வேண்டுமென சிறிலங்காஅரசும் சிங்களஇன வெறியர்களும் கூக்குரலிட்டுவருகின்றனர். மாறாக, வடக்கும்கிழக்கும் இணைந்திருந்தால் சனத்தொகையின் 78 சதவிகிதத்தினர் தமிழ்மக்களாகவிருப்பர்.அவர்

தொடர்ச்சி 5 ம் பக்கம்

"யூ.என்.பி.யைத் தோற்கடிக்க எங்களுக்கு வாக்களியுங்கள்!"
-உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்க் குழுக்கள்




## இந்திய அமைச்சர், அரசியல் பிரமுகர்கள், அதிகாரிகளுடன் ஈ.பி.ஆர்.எல்.எவ். சந்திப்பு


காட்கில்


சுர்ஜித்


டிக்ஸிற்


மூப்பனார்


மணிசங்கர் ஐயர்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அரசியல்பீட உறுப்பினர்கள் தோழர் வரதராஜப்பெருமாள் அவர்களும், தோழர் கேதீஸ்வரன் அவர்களும் கடந்த சில வாரங்களுக்கு முன் இந்திய அரசின் உயர்மட்டத் தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள், வெளிவிவ்காரத்துறை உயர் அதிகாரிகள், புத்திஜீவிகளைச் சந்தித்து தீவிரமடைந்து வரும் இலங்கையின் அரசியல் நெருக்கடி பற்றி கலந்துரையாடினர்.

இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் வி.என்.காட்கில், இந்திய மாக்சியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஹர்கிஷன் சிங் சுர்ஜித், வெளியுறவுச் செயலா ளர் ஜே.என்.டிக்ஸிற், மத்திய அமைச்சர் அருணாசலம், ஜி.கே.மூப்பனார், மணிசங்கர் ஐயர் உட்பட பல முக்கிய பிரமுகர்களைச் சந்தித்தனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியாவின் பங்களிப்பின் தேவை பற்றி எடுத்துரைக்கப்பட்டது. குறிப்பாக, வடக்கு-கிழக்கு மாகாணத்தின் பாரம்பரிய தொடர்ச்சியை நிலைநாட்டுவது பற்றியும், அர்த்தமற்ற யுத்தத்தில் அநியாயமாக மக்கள் அழிவதை முடிவுக்குக் கொண்டுவருவது பற்றியும் வலியுறுத்தப்பட்டது.

மேலும், வடக்கு-கிழக்கில் தமிழ், முஸ்லீம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய இடைக்கால அரசொன்றை உருவாக்கவேண்டிய உடனடித் தேவை பற்றியும், அதற்காக அரசியலமைப்பில் மேற்கொள்ள வேண்டிய தீவிரமான மாற்றங்கள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியாவுக்கு, தனது கடந்தகால செயற்பாடுகளின் அடிப்படையிலும், புவிசார் மற்றும் கலாச்சார, பாரம்பரிய உறவுகளின் அடிப்படையிலும் தார்மீகக் கடமை உள்ளது என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



# ☆ கண்ணோட்டம் ☆

இலங்கையின் அரசியல் அரங்கம் வியப்புக்களையும், அதிசயங்களையும் நாளாந்தம் ஏற்படுத்தும் ஒரு அரங்கமாக அண்மைக் காலங்களில் மாறி வருகின்றது. மாகாணசபை உறுப்பிகர்களைக் கடத்துவதன் மூலம், மாகாண சபைகளைக் கலைக்கும் அளவிற்கும், இராணுவம், அதிரடிப் படையினூடாக இளைஞர்களைத் தேர்தலில் பங்குபற்ற வைக்குமளவிற்கும் இங்கிருக்கக்கூடிய ஜனநாயக அரசியல் தரம் தாழ்ந்து செல்கின்றது.

நாளாந்தம் கூட்டணிகள் மாறுகின்றன. நேற்றுவரை நண்பர்களாக இருந்தவர்கள் அடுத்த கணமே எதிர்த்தரப்பற்கு மாறுகின்றார்கள். டிசம்பர் 93ல் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுடன் இணைந்து மத்திய மாகாண அரசுக்கெதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர முயற்சித்த காமினி திஸநாயக்கா, தை முடிவதற்குள்ளாகவே ஒரு மாதத்திற்குள் U.N.P ல் சேர்ந்துகொள்ள முயற்சிசெய்வதும், அதற்காக ஜனாதிபதியுடன் இராப் பகலாக பேச்சுவார்த்தை நடாத்துவதும் ஒருபுறமிருக்க, இம் மத்தியமாகாண அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஒத்துழைப்புக் கொடுக்க மறுத்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த 8 மாகாணசபை உறுப்பினர்களுக்கெதிராகவும், அவர்களுக்கு ஆதரவாக அரசாங்கத்துடன் சேர்ந்து செயற்பட்ட செல்லச்சாமிக்கெதிராகவும் இ.தொ.கா ஒழுங்கு நடவடிக்கைகள் எடுத்தது. இதனால் செல்லச்சாமியும், அவர் தலைமையிலானவர்களும், நீதிமன்றம் சென்று இவ் ஒழுங்கு நடவடிக்கையை தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படி கோரியுள்ளனர். அதேசமயம், இரு தரப்பினரும் மக்களுக்கு தமது நிலைப்பாட்டை விளங்கவைக்க மலையகத்தின் பல பகுதிகளிலும் பொதுக்கூட்டங்களையும் நடாத்தி வருகின்றனர்.

இதில் சிரிப்புக்குரிய விடயம் என்னவெனில் யாருக்காதரவாக இவர்கள் செயற்பட்டார்களோ, அவர்(காமினி திஸநாயக்கா) யூ.என்.பி. இல் சேர்ந்துவிட்டார். ஆனால், இதனால் இ.தொ.கா. விற்குள் ஏற்பட்ட உட்குழப்பம் இன்னும் மாறவில்லை.

மாகாணசபை முறை அறிமுகப்படுத்தப்பட்டதனால், இலங்கையின் தென்பகுதியில் பல அரசியல்குழப்பங்கள் ஏற்பட்டுவருகின்றன. 3 மாகாண சபைகள் எதிர்க்கட்சிகளிடம் போனதும், அவர்கள் அதிக அதிகாரங்கள் கேட்கத் தொடங்கியதும், மத்தியில் யூ.என்.பி. இருந்தும், சில மாகாணங்களில் எதிர்க்கட்சி ஆளுங்கட்சியாகஇருப்பதால் அங்கு யூ.என்.பி. தனது ஆளுமையை செலுத்த முடியாதிருப்பதும் பிரச்சினைகளுக்கு அடிப்படையாகியது.

அது மாத்திரமல்லாமல், எங்காவது எப்படியாவது அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்ற குறுகிய நோக்கம், மாகாண சபை உறுப்பினர்களைக் கடத்திச் செல்வதன் மூலம், மாகாண அரசுகளையே கலைக்கலாம் என்ற நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

இது தேர்தல் ஆண்டாக இருப்பதால் இன்னும் பல அரசியல்சித்துவிளையாட்டுக்களை இவ்வாண்டில் நாம் எதிர்பார்க்கலாம். இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் டி.யூ.என்.எவ்.-யூ.என்.பி. இணைப்பு நாடகம் தென்மாகாணத்தில் நடக்கும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி கொள்வதற்கான ஓர் முயற்சியே. U.N.P., S.L.F.P., D.U.N.F. ஆகியவற்றுக்குள் இன்னும் தொடர்ந்து மாற்றங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. ஜனாதிபதி தேர்தல் அல்லது பொதுத் தேர்தல் வரை இவை நடைபெறவே செய்யும். U.N.P. இற்குள் இருக்கும் பிரேமதாசா பிரிவு-எதிர்ப் பிரிவு என்ற பிரச்சினைகள் தோன்றும். S.L.F.P. இற்குள் இருக்கும் ஹெலஉருமயகுழு மற்றும் அநுரா ஆதரவாளர்கள் வெளியேறுவர். அதேபோல் டி.யூ.என்.எவ். உம் அத்துலத் முதலி பிரிவு, காமினி பிரிவு என்று பிரிந்துபோகும். இவைதவிர இனவாதக் குழுக்கள் ஒன்றுசேரும். இந்நிலையில் இ.தொ.கா. யாருடன் கூட்டுச்சேரும்? தொடர்ந்தும் யூ.என்.பி. யுடன் இருக்குமா? இல்லையேல் எஸ்.எல்.எவ்.பி. உடன் கூட்டுச்சேருமா என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

மலையக் மக்களின் நலன்களை முன்னிட்டே காமினியை அவர் ஆதரிக்க முற்பட்டார். அதன் மூலம் மத்திய அரசுக்கு தனது பலத்தையும் காட்ட முயன்றார். யூ.என்.பி. அரசு மலையகத் தமிழ் மக்களின் பல தொழிற்சங்க உரிமைகளை நசுக்க முற்பட்டதாலேயே தொண்டமான் இவ்வாறு செயற்பட வேண்டி ஏற்பட்டது. எனவே, யூ.என்.பி. அரசு மலையக மக்களின் நலன்களில் சரியான தீர்வை முன்வைக்காதவரை, தொண்டமான் ஓடும் புளியம் பழமும்போலவே அரசுடன் இருந்துவருவார். பொதுத்தேர்தலுக்கு மலையக மக்களின் வாக்குகளைக் கோருவோர். இ.தொ.கா. வுடன் ஓர் உடன்படிக்கைக்கு வரும் வரையில் இந்நிலையே தொடரும்.

வடக்கில் தேர்தல் நடப்பதற்கேற்ற சூழல் இல்லாததால் தமிழ் இயக்கங்கள், புலிகளால் பெரிய மாற்றமொன்றையும் ஏற்படுத்திவிட முடியாது. ஆனால், கிழக்கு மாகாணத்தில் இருக்கக்கூடிய கணிசமான தமிழ் முஸ்லிம் வாக்குகளும், இ.தொ.கா. வாக்குகளும் கூட இறுதியில் யார் அரசுக்கு வருவர் என்பதை தீர்மானிக்கும் வாக்குகளாகச் செயற்படும்.

தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதியகண்ணோட்டம் வரவேற்கிறது. அனுப்ப வேண்டிய முகவரி:

**புதியகண்ணோட்டம்,**
**த.பெ.இல: 442,**
**கொழும்பு.**

புதியகண்ணோட்டம் தொடர்பான அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

15A, வாவிக்கரை வீதி-1,
மட்டக்களப்பு.
☎ 065-4464

22, வெளிவட்ட வீதி,
வவுனியா.
☎ 024-2070

சிராவஸ்தி,
கொழும்பு-7.
☎ 685826

வெளிநாட்டு முகவரிகள்:

Post Bag: 1041,
Madras-17,
India.

B.M.Box: 1738,
London-WCIX-3NN,
U.K.

P.Box: 6800,
Agincourt,
Ont-MIS3C6,
Canada.

11, R.Salingro,
95140, Garges,
France.

P.Fach: 100206,
44002 Dortmund,
Germany.

# உள்ளூராட்சித் தேர்தலை ஏன் நிராகரிக்கின்றோம்?

❑ வட-கிழக்கு மாகாணமென்பது தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியமான வரலாற்று ரீதியான வாழ்விடம். இதனைத் துண்டாடுவதில் பேரினவாத ஆட்சியாளர்கள் குறியாகவும் வெறியாகவும் இருக்கிறார்கள்.

இந்த உள்ளூராட்சிமன்றத்தேர்தலைத் தொடர்ந்து கிழக்கு வடக்குடன் இணைந்திருக்க வேண்டுமா அல்லது பிரிந்திருக்க வேண்டுமா என்று கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்பட இருப்பதாக ஜனாதிபதி விஜயதுங்க மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறார். அந்த வகையில், வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதற்கான அரசின் சர்வஜன வாக்கெடுப்பிற்கு முந்திய ஒரு ஒத்திகை நடவடிக்கையாகவே இந்தத் தேர்தல் நடாத்தப்படுகின்றது.

❑ 1940களின் இறுதிப் பகுதியில் 2.5 வீதமாக இருந்த சிங்களவர்களின் தொகை 1993ல் 38 வீதமாக அதிகரித்துள்ளது. அதேவேளை அரச, புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான தமிழ், முஸ்லீம் மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பவில்லை. திரும்பவும் முடியாத நிலை நிலவுகிறது. இது தவிர, கிழக்கு மாகாணத்தில் அகதிகள் முகாம்களிலோ அல்லது தமது சொந்த இடங்களிலோ அவர்கள் மரணபயத்துடனேயே வாழ்கிறார்கள்.

இத்தகைய சூழ்நிலையில், உள்ளூராட்சி சபைத் தேர்தல் தமக்குச் சாதகமாக இருக்குமென பேரினவாதிகள் கணக்குப்போட்டுள்ளதுடன், இத் தேர்தலில் அதிக இடங்களைக் கைப்பற்றுவதன் மூலம் தமிழ், முஸ்லீம் மக்கள் அரசின் அராஜக, அட்டூழியங்களுக்குத் துணை போகின்றார்கள் எனக் காட்ட முயல்கின்றார்கள்.

❑ (அ) சிவில் நிர்வாகம் என்பது அங்கு பெயருக்குத்தான் இருக்கின்றது. முழுக்க முழுக்க இராணுவ நிர்வாகத்துக்கு உட்பட்ட பிரதேசமாகவே கிழக்கு மாகாணம் இருக்கின்றது. சகல சிவில் நிர்வாக அமைப்புக்களிலும் இராணுவத் தலையீடு நிலவுகின்றது.

(ஆ) ஆட்கள் கடத்தப்படுதல், காணாமல் போதல், கூட்டங் கூட்டமாகக் கைதுகள், அநியாயக் கொலைகள் தொடர்கின்றன.

சுயவிருப்பத்திற்கு மாறாக உள்ளூராட்சித்தேர்தலில் போட்டியிடுமாறு சாதாரண பொதுமக்கள் மிரட்டப்படும், அச்சுறுத்தப்படும் சம்பவங்களும் நிகழ்கின்றன.

ஒரு சாதாரண பொதுக்கூட்டம் நடத்தி மக்களுக்கு விடயங்களை எடுத்துக் கூறுவதே அங்கு மிகவும் கடினமானகாரியம். அவசரகாலச்சட்டத்தின்கீழ் யாரும் வாய் திறக்க முடியாது. அதுமாத்திரமல்ல, பொதுக்கூட்டத்திற்கு இராணுவத்திடம் அனுமதி பெறுவதென்பதே முயல்கொம்பான நிலை.

❑ வடக்கில்தான் பிரச்சினைகள் இருக்கின்றன. அதுவும் பயங்கரவாதப் பிரச்சினைதான். கிழக்கில் பிரச்சினைகள் எதுவும் இல்லை. அங்கு அமைதி திரும்பி விட்டது என்று ஒரு போலியான தோற்றத்தை உருவாக்குவதும் அரசின் நோக்கமாக இருக்கின்றது. இதன்மூலம் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைக் கொச்சைப்படுத்தும், தமிழர்களின் கோரிக்கைகளைப் பலவீனப்படுத்தும், வடக்கு கிழக்கு என பேதங்களை உருவாக்குவதும் அரசின் நோக்கமாக அமைகிறது.

❑ அரசின் யுத்த நடவடிக்கைகளினால் ஏற்பட்டுள்ள மனித அழிவுகள், ஆயிரக்கணக்கானவர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளமை போன்ற விடயங்களால் உலக நாடுகள் பல இலங்கை அரசு மீது அதிருப்தி கொண்டுள்ளன.

பல மனித உரிமை அமைப்புக்கள், ஐ.நா. மனித உரிமைக் கமிஷன் போன்றவை இது தொடர்பாக விசனம் தெரிவித்துள்ளன. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும்படியும், யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும்படியும் அரசின்மீது நெருக்குவாரங்கள் அதிகரித்துள்ளன. எனவே, உலகத்தை ஏமாற்றுவதற்கான ஒரு கண்துடைப்பு வேலையாகவும் இத்தேர்தல் 'நடத்தப்படுகின்றது. அதாவது கிழக்கில் கீழ்மட்டத்தில் ஜனநாயக அமைப்பு முறையை உருவாக்க முயல்வதாக இவர்கள் காட்டிக் கொள்கிறார்கள்.

❑ இலங்கையின் கர்ப்பத்தை உதைக்கும் மாபெரும் விடயமாக தேசிய இனப் பிரச்சினை உருவெடுத்துள்ள வேளையில், அதனைத் திசைதிருப்பும் நடவடிக்கையாகவும் இந்த உள்ளூராட்சித் தேர்தல் அமைகின்றது.

❑ நீண்டகால நோக்கில் கிழக்குமாகாணத்தை சிங்கள மயமாக்கும் நோக்கமும் இதில் அடங்கியிருக்கிறது. இது தமிழர்களின் அடிப்படையான கோரிக்கைகளுக்கு எதிரான மோசமான பேரினவெறி நடவடிக்கையாகும்.

❑ நாட்டில் இனப்பிரச்சினை இல்லை, பயங்கரவாதப்பிரச்சினைதான் உண்டு என்ற அரசின் கருத்தைப் பலப்படுத்தும் நோக்கமும் இத்தேர்தலில் அடங்கியிருக்கிறது.

❑ வட, கிழக்குப் போர்முனைகளில் ஏற்பட்ட தோல்விகளால் விரக்திஅடைந்து வரும் இராணுவத்தை உற்சாகப்படுத்தும் நோக்கமும், யுத்தத்திற்கு எதிரான கோரிக்கைகளை வலுவிழக்கச் செய்வதுமான நோக்கங்களும் இவ்வுள்ளூராட்சிமன்றத் தேர்தலில் அடங்கியிருக்கின்றன.

❑ இந்தத் தேர்தலில் தமிழ், முஸ்லீம் அமைப்புக்கள் சிலவற்றைப் பங்குபற்ற வைப்பதன்மூலம் தமிழ் அமைப்புக்களிடையேயும், தமிழ்-முஸ்லீம் அமைப்புக்களிடையேயும் பேதங்களை உருவாக்குவதுவும், அதன்மூலம் தமிழ் பேசும் மக்களின் கோரிக்கைகளைப் பலவீனப்படுத்துவதுவும் அரசின் நோக்கமாகும்.

❑ உண்மையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் மாகாண சபையின் அதிகாரங்களுக்கு உட்பட்டவையே. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண சபையை அரசியல் சட்ட விதிகளுக்கு முரணாகக் கலைத்து, மத்திய அரசு அங்கு தனது ஆட்சியை நடாத்தி வருகின்றது.

வடக்கு கிழக்கைப் பிரித்தல், யுத்தம் ஆகிய நோக்கங்களைப் பிரதான இலக்காகக் கொண்டு நடத்தப்படும் இத்தேர்தலை மேற்கூறிய காரணங்களுக்காக நிராகரிக்குமாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சே.,ருகின்றது. தமிழ்பேசும் மக்களின் நலன்களுக்கு எதிரான பேரினவாத நோக்கத்திலிருந்து நடாத்தப்படும் இத்தேர்தல் நிராகரிக்கப்பட வேண்டியதே. இத் தேர்தல் ஒரு ஜனநாயக நாட்டின் அரசியல் முடிவு என்பதை விட, ஒரு தேசியஇனத்தை அழிக்கும் இராணுவக் கண்ணோட்டத்தில் அமைந்த முடிவென்பதே எமது அபிப்பிராயமாகும். அதாவது, அரசின் யுத்த தந்திரோபாயம் தொடர்பான முடிவே இதுவாகும்.

முழுக்க முழுக்க இராணுவமும், விசேட அதிரடிப் படையினருமே தேர்தல் நடவடிக்கைகளில் பிரதான பங்கெடுத்துள்ளனர். இதனை, ஜனநாயகம் என்ற பெயரில் நடத்தப்படும் கேலிக்கூத்தாகவே நாம் கருத முடியும்.

இதில் பங்குபற்றும் தமிழ், முஸ்லீம் அமைப்புக்கள் அறிந்தோ அறியாமலோ தமிழ் பேசும் மக்களுக்கெதிரான அரசின் சதி நடவடிக்கைகளுக்குத் துணைபோவதாகவே அமையும்.

தமிழ் பேசும் மக்களே!

நீங்கள் இத்தேர்தலை அலட்சியம் செய்வீர்கள் என்பதில் எமக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது. ஆனால், வாக்களிக்குமாறு உங்களுக்கு மிரட்டல்கள் வரும் என்பதை நாம் உணராமல் இல்லை. அத்தகைய சந்தர்ப்பத்தில், உங்களது வாக்குச் சீட்டுகளைப் பயனற்றதாக்கி விடுங்கள். இதன்மூலம் துஷ்பிரயோகங்களை இயன்றவரை தடுக்கலாம்.

**உள்ளூராட்சித் தேர்தலைப் பகிஷ்கரியுங்கள்!**

12.01.94 அன்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வெளியிட்ட துண்டுப்பிரசுரம்.

படிப்பகம்

www.padippakam.com



# ஆன்றலிற்குரிய தோழர்களே!

**அன்பிற்கினிய தோழர்களே!**

புதுவருடவாழ்த்துக்களையும், பொங்கல் நல்வாழ்த்துக்களையும் தோழமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

1994ம் ஆண்டில் தன்னம்பிக்கைகளோடு எமது காலடிகளை முன்னெடுத்து வைப்போம்.

பிறந்துள்ள புதிய ஆண்டானது இன்னல்களுக்கும் துயரங்களுக்கும் மட்டுமே உரிமையாளர்களாக்கப்பட்டுள்ள எமது மக்களுக்கு, அவர்களது எதிர்காலம் பற்றியநம்பிக்கைகளுக்குஉரிய திசைவழி காட்டும் ஆண்டாக அமையவேண்டும் என எதிர்பார்ப்போம்.

**தோழர்களே!**

இருபது வருடங்களுக்கு முன்னர் இதே தைத்திங்களிற்தான் யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடும், அந்த மாநாட்டின் இறுதிநாள் நிகழ்ச்சியின்போது சிங்களப் பேரினவாதிகள் தமது பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டு பதினொரு அப்பாவித் தமிழர்களைப் படுகொலை செய்த நிகழ்ச்சியும் நடைபெற்றன.

ஈழத்துமக்களின் போராட்டவரலாற்றில் அந்த நிகழ்ச்சியானது ஒரு பிரதான திருப்பு முனையின் மைல் கல்லெனலாம்.

ஆத்திரத்தையும் வேதனையையும் ஒருசேரக் கிளப்பிய அந்த இரவின் கண்கண்ட சாட்சிகள் பலர் இன்னமும் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உயிரோடிருக்கிறார்கள்....

அவர்களுக்கெல்லாம், அந்தக் கோரமான இரவு கழிந்து இருபது வருடங்கள் ஆகிவிட்டன என்பது நிச்சயமாக ஆச்சரியமாகவே இருக்கும்.

கடந்த இருபது ஆண்டுகளில், அளவு ரீதியில் கோரம், கொடூரம், கொலைகள் என்று பார்த்தால் அதைவிட மிக மோசமான இரவுகளை ஈழமக்களின் வரலாறானது 1974ம் ஆண்டின் அந்த 10ந் திகதிக்குப் பின்னர் எத்தனையோ தடவை கண்டிருக்கின்றது கடந்து வந்திருக்கின்றது.

இருப்பினும், 1974ம் ஆண்டின் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு குறிப்பாக, ஜனவரி 10ந் திகதி இரவானது ஈழத் தமிழ் மக்களால் மறக்கப்பட முடியாத ஒன்றாகும். பின்னைய ஆண்டுகளுக்கான போராட்ட உணர்வலைகளையும் உந்துதல்களையும் நிர்ணயித்த காரணிகளுள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

தன்னெழுச்சியான மக்கள் எழுச்சி என்றால் என்ன? அது எப்படி இருக்கும்? அது எவ்வாறு செயற்படும்? என்பதை அந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின்போதுதான் நாம் நேரடியாகக் கண்டோம்.

பரந்துபட்ட ஈழத் தமிழ் மக்களின் அரசியல் உணர்வலைகளின் வெளிப்பாடே அந்த எழுச்சி..... சிங்கள இனவாத சிறிலங்கா அரசின் திமிர்த்தனமான நடவடிக்கைகளுக்கு எதிராக தமிழ் மக்கள் எழுப்பிய உரிமைக் குரலைப் பிரதிபலித்த ஜனநாயக எழுச்சியே அது.....

அன்றைய சிறிலங்கா அரசானது அந்த உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டை கொழும்பில்தான் நடத்தவேண்டுமென வலியுறுத்தியது.....யாழ்ப்பாணத்தில் நடத்தவேண்டாமென வற்புறுத்தியது.....

மாநாட்டு அமைப்புக் குழுவினர், யாழ்ப்பாணத்திலேதான் மாநாட்டை நடாத்துவது என இறுதியாகத் தீர்மானித்தபோது அரசாங்கம் ஒத்துழைப்புத் தராதது மட்டுமல்லாது, எதிரான நெருக்கடிகளைக் கொடுத்தது.

இதனாற்தான், தமிழ் மக்கள் அந்த ஆராய்ச்சி மாநாட்டுக்கு தமது உளப்பூர்வமான ஆதரவைத் தெரிவிக்கத் தொடங்கினார்கள்....ஒருவரைப்பார்த்து மற்றொருவர்.....ஒரு வீட்டைப் பார்த்து மற்ற வீடு....ஒரு வீதியைப் பார்த்து மற்ற வீதி....ஒரு கிராமத்தைப் பார்த்து மற்றக் கிராமம்.....ஒரு நகரத்தைப் பார்த்து மற்ற நகரம் என மக்கள் தமது ஆதரவைத் தெரிவித்தார்கள்.

எங்கு பார்த்தாலும் வாழைகளும் தோரணங்களும்....தென்னைகளும் சவுக்குகளும் அடியோடு கொண்டு வரப்பட்டு வீதிகள் நெடுகிலும், சந்திகள் தோறும் நடப்பட்டன....எங்கும் கோயில் திருவிழாக்கள் ஒரே நேரத்தில் கொண்டாடப்பட்டால் எப்படியோ அப்படியொரு கோலாகலமாய் மக்கள் கொண்டாடினர்.

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை மக்கள் வெறுமனே ஒரு ஆராய்ச்சி மாநாடாக மட்டும் கருதவில்லை..... மாறாக, தத்தம் வீடுகளில் நடைபெறும் ஒரு பெரும் கொண்டாட்டமாகவே கருதிக் கொண்டாடினர்.

தமிழ்ப்பேபரறிஞரும் வணக்கத்துக்குரிய தந்தையுமான தனிநாயகம் அடிகளாரின் தலைமையில் 1974ம் ஆண்டு தைத்திங்கள் 3ந் திகதி ஆரம்பித்த ஆராய்ச்சி மாநாடு 9ந் திகதிவரை நடைபெற்றது.

10ந் திகதியன்று மாநாட்டின் இறுதி நிகழ்ச்சியாக பகலில் கண்காட்சி ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. அன்று மாலை, மாநாட்டில் பங்கு பற்றுவதற்காக உலகின் பல்வேறு நாடுகளிலுமிருந்து வந்திருந்த பேரறிஞர்களின் உரையை மக்கள் கேட்கும் வகை செய்யும் பொருட்டு, யாழ்ப்பாண முற்றவெளி மைதானத்தையொட்டி இருந்த வீரசிங்கம் மண்டபத்தில் பொதுக்கூட்டம் ஒன்று நடாத்தப்பட்டது.

அந்தப் பொதுக்கூட்டம் ஆரம்பித்து ஒருசில நிமிட நேரத்தில் மண்டபம் கொள்ளமுடியா வகையில் மக்கள் கூட்டம் நிறைந்து வழிந்தது....மாநாட்டு அமைப்பாளர்கள் தவிர்க்கமுடியா வகையில் கூட்டத்தை மண்டபத்திற்கு வெளியே நடாத்த வேண்டி ஏற்பட்டது.

பொதுக்கூட்ட மேடையானது வீரசிங்கம் மண்டப வளவு எல்லைக்கு உள்ளேயே அமைந்ததாயினும், மக்கள் முற்றவெளி மைதானமெங்கும் நிறைந்திருந்தனர்.

கூட்டத்தில் உரையாற்றிய தமிழறிஞர்கள் தமிழுணர்ச்சி பொங்கும் பேச்சுக்களை ஆற்றினர்.....மக்கள் அந்த உரைகளோடு ஒன்றிப்போயிருந்தனர். பொழுதோ இரவாயிற்று, மைதானம் முழுவதும் மக்கள் எண்ணிக்கையும், மக்களிடையே உணர்ச்சி அலைகளும் பெருக்கெடுத்து நின்றன.....

இந்தவேளையிற்தான், சிவ பூசைக்குள் கரடி புகுந்தாற்போல், சிறிலங்கா அரசின் பொலிஸ் படையினர், மடைதிறந்த வெள்ளம்போற் திரண்டிருந்த மக்களிடையே புகுந்து தமது காட்டுமிராண்டித்தனத்தைக் கட்டவிழ்த்துவிட்டனர்.... அநியாயமாக பதினொரு அப்பாவித் தமிழர்கள் படுகொலையாயினர்.

அந்த நிகழ்ச்சியானது தமிழர்கள் பலரை ஆத்திரம் கொள்ள வைத்தது.... பழிக்குப்பழி வாங்க வேண்டும் என்ற உணர்வுக்குத் தூண்டியது.....

தமிழாராய்ச்சி மாநாட்டை சீராக நடத்தும்பொருட்டு ஓர் தொண்டர் படையொன்று அமைக்கப்பட்டது. அத்தொண்டர்படை சிவகுமாரனின் தலைமையில் அமைக்கப்பட்டது....அத்தொண்டர்படையில் தோழர் பத்மநாபா அவர்களும் ஓர் தொண்டனாக இணைந்து செயற்பட்டார்.

தமிழாராய்ச்சிமாநாட்டுப்படுகொலை நிகழ்ச்சியால் ஆத்திரம் கொண்ட சிவகுமாரன், தன்னோடு வேறு சில இளைஞர்களையும் சேர்த்துக்கொண்டு, அப்படுகொலைக்குக் காரணமானவர்களை ஒழித்துக்கட்டும் நோக்குடன் ஒரு இரகசியக் குழுவாகச் செயற்பட்டமையும்.....

.....பின்னர், சிவகுமாரன் சிறிலங்கா பொலிஸ் படையினரால் தீவிரமாகத் தேடப்பட்டமையும், அவ் வேளையில் மக்கள் சிவகுமாரனுக்கு அளித்த ஆதரவும்....இவ்வாறு சில மாதங்கள் செல்ல....

...1974ம் ஆண்டு ஜுன் மாதம் 5ம் திகதி பொலிசாரினால் சுற்றி வளைக்கப்பட்டபோது சிவகுமாரன் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டமையும்.... சிவகுமாரனின் மரணச்சடங்கு மீண்டும் ஒரு தடவை மக்களின் எழுச்சியாக அமைந்தமையும்..... என தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைச் சம்பவமானது ஒரு நிகழ்ச்சித் தொடருக்கு வழி வகுத்தது.

ஏற்கனவே தமிழ் மக்கள் மத்தியில் தனிநாடு பற்றியதோர் உணர்வானது தெட்டம் தெட்டமாக இருந்து வந்ததாயினும், அவ்வெண்ணம் பரந்துபட்ட மக்களின் எண்ணமாக உருப்பெற்று இருக்கவில்லை.

அந்தப் படுகொலைச் சம்பவமே தமிழ்மக்களிடையேசுதந்திரஈழம் பற்றிய ஆழமான சிந்தனைக்கு அடி கோலியது.

அப்படுகொலைச் சம்பவமே தமிழர்கள் மத்தியில் ஆயுதப் போராட்டம் என்ற அடிப்படையில் தீவிரவாதத்திற்கு பலமான தளமமைத்தது.

ஈழத்து மக்களின் அரசியல் வரலாற்றில் ஒரு பிரதான நிகழ்ச்சியாகவும், ஒரு திருப்புமுனைச் சம்பவமாகவும்அமையும் அந்த தமிழாராய்ச்சி மாநாட்டின் தினங்களாகிய ஜனவரி 3ந் திகதி தொடக்கம் 10ந் திகதி வரைக்குமான நாட்களை ஒவ்வோர் ஆண்டும், தமிழ் மக்கள் அனைவரும் எழுச்சி வாரமாகக் கொண்டாட வேண்டும் என தோழர் பத்மநாபா அவர்கள் பல தடவைகள் முயற்சித்தார்.

ஆனால் ஒவ்வொரு தடவையும் ஏதோவொரு காரணத்தால் அது நடைமுறைப்படுத்தக் கூடியதாக அமையவில்லை.

அடுத்து வரும் வருடங்களிலாயினும் தோழர் நாபா அவர்களின் இந்த நினைவை நாம் நடைமுறையாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள உறுதி கொள்வோம்.

புலிகளினதும் மற்றும் சில தமிழ்க் குழுக்களினதும் துரோகத்தனமான நடவடிக்கைகளினால் இன்று தமிழ் மக்கள் பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்ற நிலைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றனர்.

நொந்துபோயிருக்கும் தமிழ் மக்கள் மத்தியில் எதிர்காலம் பற்றிய நம்பிக்கைகள் தொய்ந்து போயிருப்பது இயல்பே. ஆனரல் அதுவேதான் நிரந்தரமானது எனக் கருதுவது மிகத் தவறானதாகும்.

தமிழ் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளையும், உயிர் உடமைகளுக்கான பாதுகாப்பையும் உறுதி செய்யும் வகையான நிரந்தர அரசியற் தீர்வு ஒன்று ஏற்படாதவரை தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கான நிலமை ஏற்படமாட்டாது.

எனவே, போராட்டத்தின் இறுதி வெற்றியை நாம் அடையும்வரை, மக்கள் மத்தியில் நம்பிக்கை தளரா நிலையைப் பராமரிப்பதுவும் எமது கடமைகளில் ஒரு பகுதியாகும்.

கடந்த காலத்தின் சில பிரதானமான நினைவுகளை மீட்கும், நினைவு தினங்களும், எழுச்சி வாரங்களும் ஒரு போராட்டத்தின் மறுக்கமுடியாத ஒரு பகுதியே.

இப்படிக்கு,
உங்கள் அன்புத் தோழன்
வரதன்.
10.01.94.

## எனது அரசியல் கட்சிக்கு

அறிமுகமற்ற மனிதர்களிடமும்
நீ எனக்கு சகோதரத்துவம் கொடுத்தாய்.
வாழ்ந்து கொண்டிருக்கும் எல்லாவற்றின் மொத்த வலிமையையும்
நீ எனக்குக் கொடுத்தாய்.
ஒரு புதிய பிறப்புப் போல
நீ எனது தேசத்தை எனக்குக் கொடுத்தாய்.
தனியனான மனிதனுக்குக் கிடைக்காத சுதந்திரத்தை
நீ எனக்குக் கொடுத்தாய்.
என்னுள் கருணையின் வளம்
நெருப்புப் போலக் கனன்றெரியச் செய்ய
நீ எனக்குக் கற்றுக் கொடுத்தாய்.
ஒரு மரத்துக்குத் தவிர்க்க இயலாத உயரத்தை
நீ எனக்குக் கொடுத்தாய்.
மனிதர்களின் ஒருமையையும், பன்முகத்தன்மையும் காண
நீ என்னைத் தகுதியானவனாக்கினாய்.
எல்லோருடைய வெற்றியிலும்
என்னுடைய அந்தரங்கத் துயர்கள்
இறந்து போவது எவ்வாறு என்று
நீ எனக்குக் காட்டித் தந்தாய்.
எனது சகோதரர்களின் கடினப் படுக்கைகளில் இளைப்பாற
நீ எனக்குக் கற்றுக் கொடுத்தாய்.
பாறை மீது உருவாக்குவது போல
யதார்த்தத்தின் மீது நிர்மாணம் மேற்கொள்ள
நீ என்னைத் தூண்டினாய்.
மந்த புத்திக்காரன் மீது விழும் சாட்டை போல
கொடுஞ் செயல்களுக்கு என்னை எதிரியாக்கினாய்.
உலகத்தின் புத்துணர்வையும் சுகத்தின் சாத்தியங்களையும்
நீ எனக்குக் கற்றுக் கொடுத்தாய்.
நீ என்னை இறப்பற்றவனாக்கி இருக்கிறாய் -
எவ்வாறெனில்
இனி நான் எனக்குள்ளேயே ஒடுங்கமாட்டேன்.

– பாப்லோ நெரூடா
தமிழில்: சுகுமாரன்

படிப்பகம்

www.padippakam.com



# மாவீரர் சமாதியில் மாத்தையாவுக்கு இடமில்லை



கண்ணதாசனின் கவிதை வரியொன்று:

'ஆடிய ஆட்டமென்ன தேடிய செல்வமென்ன கூடுவிட்டு ஆவி போனால் கூடவே வருவதென்ன...'

புலிகளினால் மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் மாத்தையாவுக்கு இப்பாடல் வரி ஞாபகத்திற்கு வரலாம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதித் தலைவர், கலைக்கப்பட்ட புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர், மாத்தையா என அழைக்கப்படும் கோபாலசாமி மகேந்திரராஜா புலிகளின் குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட்டிருக்கிறார். இந்தக் கூண்டில் ஏற்றப்பட்டவர்கள் எவரும் உயிருடன் மீண்டதாகச் சரித்திரமே இல்லை.

துரோகிகள், சமூகவிரோதிகள், கைக்கூலிகள், எட்டப்பர்கள், ஏஜெண்டுகள் என எத்தனை விடுதலைப் போராளிகள், எத்தனை அப்பாவிப் பொதுமக்கள் புலிகள் இயக்கத்தால் கொல்லப்பட்டிருக்கிறார்கள்!

ஆனால் இங்கு சோகம் என்னவென்றால், இந்த மரணங்களை விளைவித்த பிதாமகர்களில் ஒருவர் – தளபதி ஒருவர் – அண்மைக்காலத்தில் தம்பி பிரபாகரனின் அடுத்த ஸ்தானத்தில் இருந்தவர் இன்று அதே பட்டங்களுடன் நின்றுகொண்டிருக்கிறார்.

– கப்பலில் இலங்கை நோக்கிப் பிரயாணம் செய்துகொண்டிருந்த கிட்டுவைக் காட்டிக் கொடுத்தார்;

– இந்திய உளவுத் துறையுடனும், இலங்கையின் புலனாய்வுத் துறையுடனும் தொடர்பு வைத்திருந்தார் என்று அவர்மீது குற்றச்சாட்டுகளை தம்பி பிரபாகரன் அடுக்குகிறார்.

தம்பிக்கு இது ஒன்றும் புதிய விடயமில்லை என்றாலும், கடந்த 20 வருடங்களாக தம்பி பிரபாகரனுடன் நட்புப் பூண்டிருந்து புலிகள் இயக்கத்தின் போர்முனை வெற்றிகள், தோல்விகள், பழிபாவங்கள் எல்லாவற்றிலும் தன் முத்திரையைப் பதித்து பிரபாகரனுக்கு அடுத்தவர் என்ற ஸ்தானத்திலிருந்த மாத்தையா, கடைசியாக சொந்த இயக்கத்தின் துப்பாக்கிக் குழலுக்கு முன்னே நிறுத்தப்பட்டிருக்கிறார்.

அந்த இயக்கத்தினுள் ஒரு சிங்கம் போல இருந்த அவரை, ஒரு சிறு பையன் சேட் கொலரில் பிடிக்குமளவிற்கு அவர் நிலை பரிதாபமாகிவிட்டது.

அவர் எத்தனை பிணங்களின் மீது நடந்து வந்து பிரதித் தலைவரானார்! எத்தனை பேரின் சவக்குழிகளின் மீது தனது அதிகாரக் கோட்டையை கட்டி எழுப்பினார்! வருங்கால முதலமைச்சரே வருக என தலைவன் தம்பி பிரபாகரனால் வாயார அழைக்கப்பட்ட மாத்தையா, தன்னைத் தலைவரே மண்டையில் போடும் உத்தரவை இடுவார் என இவ்வளவு சீக்கிரம் எதிர்பார்த்திருக்க மாட்டார்.

அவர் புலிகளின் விசாரணைச் சிறையில் இருக்கும்போது கண்டிப்பாக பத்மநாபாவையும், அமிர்தலிங்கத்தையும், சிறீசபாரத்தினத்தையும், ராஜனி திரணகமவையும், ஆனந்தராஜா மாஸ்டரையும், விஜிதரனையும், விமலேஸ்வரனையும் இன்னும் பலப்பலரையும் நினைக்காமல் இருந்திருக்க முடியாது.

துரோகி என்ற பட்டத்தைச் சுமப்பது எவ்வளவு கஷ்டமானது, எவ்வளவு பெரிய சித்திரவதை என்பது மாத்தையாவிற்கு அப்போதும் புரிந்திருக்குமோ என்னவோ?

"எங்கட அண்ணனைக் கொண்டு போகாதேங்கோ" என புலிகளால் கடத்திச் செல்லப்பட்ட தமது சகோதரனை விடுவிப்பதற்காக கிணற்றடியில் குளித்துக் கொண்டிருந்த ஏழைச் சகோதரிகள் காலைப் பிடித்துக் கெஞ்சிய போது, அவர்களை காலால் உதைத்துவிட்டு அந்தக் குடும்பப் பொறுப்புள்ள இளைஞனை நிரந்தரமாக காணாமல் செய்த புலிகளுக்கெல்லாம் தலைமை ஏற்றவர்.

புலிகளால்கைதுசெய்யப்பட்ட தனது பிள்ளைக்காக அவர்களின் காலில் விழுந்து மன்றாடிய ஏழைத்தாயின் முகத்துக்கு நேரே மணிக்கூட்டையும், அவனது உடைமைகளையும் வீசி எறிந்தவர்களுக்கெல்லாம் வழிகாட்டியவர்.

இப்போது, தனது தானைத் தலைவனின் உத்தரவின்பேரில், அவர் வளர்த்த சிஷ்யகோடிகளால் அம்புப் படுக்கையில் கிடத்தப்பட்டுள்ளார்.

பிரபாகரன் புலிகள் இயக்கத்தை ஆரம்பித்த நாட்களிலேயே, தன்னுடன் சேர்ந்திருப்பவர்களையும் கொலை செய்யும் நடைமுறையைத் தொடங்கிவிட்டார் எனினும், பேரும் புகழும் பெற்றுவிட்ட தன்னை, பல போர்முனைகளில் வெற்றிவாகை சூடிய தன்னை, தலைவனுக்கு விருப்பமான காரியங்கள் எல்லாவற்றையும் செய்த தன்னை, அவர் விரும்பாதவர்களை எல்லாம் வேட்டையாடிய தன்னை இப்படி அகாலமாக மரணமடையச் செய்வார் என்று மாத்தையா கனவிலும் நினைத்திருக்கமாட்டார். ஏனெனில், தலைவர் 1981ல் இயக்கத்தைவிட்டுச் சென்றபோதும் புலிகள் இயக்கத்தை தலைமையேற்று நடத்தியவர் அல்லவா அவர்.

தம்பி பிரபாகரன் புலிகள் இயக்கத்தைவிட்டு வெளியேறியபோது, தன் நேர்மையைக் காட்டுவதற்காகத் தனது கோவணத்தையும்கூடக் கழற்றி மாத்தையாவிடம் கொடுத்துவிட்டுச் சென்றார் என்றும் ஒரு கதை உண்டு. கடைசியாக மாத்தையாவே திரும்பவும் சேர்த்துக் கொண்டார்; தன்னிகரில்லாத் தலைவனாக ஏற்றுக் கொண்டார்.

யூலியசீஸர்நாடகத்தில், தன்னை முதுகில் குத்திய உற்ற நண்பன் புரூட்டஸ்ஸைப் பார்த்து "புரூட்டஸ் நீயுமா?" என்று கேட்பான். மாத்தையாவின் பரிதாப நிலையைப் பார்க்கும்போது அந்த நாடகக் காட்சி தான் ஞாபகத்துக்கு வருகிறது. அவர் அப்படிக் கேட்பதற்கு தம்பி பிரபாகரனின் தர்பாரில் இடமில்லை.

ஆனால், பிரபாகரனைத்தவிர வேறு யாரிடம் அவர் கேட்கமுடியும்? அவருக்கு புலிகள் இயக்கத்தை விட்டால் கேட்பதற்கு வேறு நண்பர்களா இருக்கிறார்கள்! பாவம். புலிகள் இயக்கத்தினரும், அதன் ஆதரவாளர்களும் தலைவன் வாக்கை வேதவாக்காக எடுப்பவர்கள் அல்லவா. அதற்கப்பால் எல்லோரையும் விரோதித்துக் கொண்டுவிட்டாரே...!

"நான் ஒரு துர்க்கனாக் கண்டேன், நீங்கள் சபைக்குப் போகவேண்டாம்" என்று சீஸரை அவன் மனைவி தடுப்பாள். "அஞ்சினார்க்குச் சதமரணம் அஞ்சாத நெஞ்சத்து ஆடவர்க்கொரு மரணம்" என்று யூலியசீஸர் சபைக்குச் செல்வான்.

"அவர் எத்தனை பிணங்களின் மீது நடந்து வந்து பிரதித் தலைவரானார்! எத்தனை பேரின் சவக்குழிகளின் மீது தனது அதிகாரக் கோட்டையை கட்டி எழுப்பினார்! வருங்கால முதலமைச்சரே வருக என தலைவன் தம்பி பிரபாகரனால் வாயார அழைக்கப்பட்ட மாத்தையா, தன்னைத் தலைவரே மண்டையில் போடும் உத்தரவை இடுவார் என இவ்வளவு சீக்கிரம் எதிர்பார்த்திருக்க மாட்டார்."

மாத்தையாவின் மனைவி புலிகள் இயக்க மாதர் அமைப்பின் தலைவி; மூன்று பிள்ளைகளின் தாய். பாவம் அவள், கனவைச் சொல்லுவதற்கு முன்னல்லவா கதவைத் தட்டி அழைத்துச் சென்றுவிட்டார்கள்.

மனைவியும் பிள்ளைகளும் கதறக் கதற தன்னாலும் தனது சகாக்களாலும் இழுத்துச்செல்லப்பட்டுமரணதண்டனை விதிக்கப்பட்ட அப்பாக்களைப் பற்றி, கணவன்மார்களைப் பற்றி, தன் மரணத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கும் மாத்தையா சிந்திக்காமல் இருக்க முடியாது.

தேசத்தின் விடுதலை என்னும் உயர்ந்த இலட்சியத்திற்காக புறப்பட்ட பல்லாயிரக்கணக்கான இளைஞர்களையும் யுவதிகளையும் போராட்ட அரங்கை விட்டு விரட்டி நடைப்பிணமாக்கியவர்.



தலைவன் காலால் இட்ட பணியைத் தலையால் செய்யுமளவிற்கு கண்மூடித்தனமான தலைவர்பக்தி கொண்டவர்.

முடிசூடாத ராஜாவாக அதிகார தோரணையோடு நடந்து பழக்கப்பட்ட மாத்தையாவின் நிலை இன்று சாதாரண மனிதனைப் போன்றுகூட இல்லை.

'ஆற்றங்கரையின் மரமும் அரசு வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றோ' என்பது போலல்லவா மிக உயரமான இடத்திலிருந்து மரணப் பள்ளத்தாக்கில் அடிபெயர்ந்து விழுந்துவிட்டார்.

புலிகள் இயக்கம் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைத் தடை செய்தபோது, கைது செய்யப்பட்ட 53 போராளிகளை நல்லூர் கந்தன்கருணை இல்லத்தில் சிறை வைத்திருந்தார்கள். கிட்டுவிற்கு தலைவரின் உத்தரவின் பேரில் கிரனைட் வீசப்பட்டது. விளைவு, அடைத்து வைக்கப்பட்டிருந்த போராளிகளின் உடல்கள் அறையை அடைத்த இரத்த வெள்ளத்தில் மிதந்தது.

இப்போது கிட்டு மரணமாகி விட்டார். கிட்டுவின் மரணத்திற்கு மாத்தையா காரணம் என்று, கிட்டு மரணமாகி ஓராண்டு முடிவில் மாத்தையாவிற்கு மரண தண்டனை விதிக்கிறார் தலைவர்.

கிட்டுவின் கால் போனதற்காக, அறைக்குள் அடைத்து வைத்திருந்த 53 போராளிகளைப் படுகொலை செய்ததை மழுப்பலாக நியாயப்படுத்தி முரசொலியும் ஈழமுரசும் அப்போது செய்தி எழுதின. 19, 20 சமூக விரோதிகள் இறந்து போனார்கள் என அவை வக்கிரமாக எழுதின. இதனை 'முறிந்த பனை' புத்தகத்தில் குறிப்பிட்டெழுதிய ராஜனி திரணகமவும் பின்னர் புலிகளால் படுகொலை செய்யப்பட்டார்.

17.04.87ல் லண்டன் கேம்பிரிட்ஜில் கலந்துரையாடல் ஒன்றை நடத்திய பேராசிரியர் சிவத்தம்பி, கிட்டுவிற்கு நிகழ்ந்த தாக்குதல் புலிகளின் உட்கட்சிப் பிரச்சினையால்ஏற்பட்டது என்ற வாதம் முற்றிலும் பிழையானது என்றும், இதனால் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனரெனில் அவர்கள் யார், எங்கிருந்தார்கள், என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்றெல்லாம் பார்க்க வேண்டியது மிகவும் முக்கியமானது என்றும் தனது 'பிராரம்ப உசாவலை' அழகாக நிகழ்த்தியிருந்தார்.

இவ்வாறாக, மாத்தையாவிடம் குழைந்தவர்கள் நெளிந்தவர்கள், அவருடன் பேசுவதில் புளகாங்கிதம் கொண்டவர்கள், அவரது போராட்டப் பற்றை வியந்து பெருமிதங் கொண்டவர்கள் எல்லாம் இப்போது வெட்கம் ரோசமின்றி மாத்தையா போடப்பட வேண்டிய ஆள்தான் என்று எழுதுவார்கள்; பேசுவார்கள். எமது சமூகத்தின் தலைவிதி இது.

புலிகளல்லாத, புலிகளிசத்தை விழுங்கி அவர்களுடைய பாணியிலேயே தமது பேச்சுக்களையும் எழுத்துக்களையும் மாற்றிக்கொண்ட துப்பாக்கிஏந்தாத

தொடர்ச்சி ☞

நன்றி: THE ISLAND

www.padippakam.com



...ாசிஸ்டுகள், மாத்தையாவிற்கு மரண ...ண்டனை பற்றி என்ன எழுதப் போகி...ீறார்கள்? துரோகத்தின் விலை சாவு ...ன்றா?

புலிகள்இயக்கம் தேசபக்தசக்திஎன்ற ...வர்கள் மாத்தையாவைத் தேசத்துரோகி ...ன்றா எழுதப் போகின்றார்கள்?

தமிழரின் வீரத்தைப் பற்றி புறநா...னூற்றைப் பற்றி மார்தட்டுபவர்களுக்கு ...ஒன்றைக் கூறிவைக்க விரும்புகின்றோம்: உங்களின் உணர்ச்சிகளுக்கு அறிவை அடகு வைத்துள்ளீர்கள். நாகரீகமான ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று நம்மைச் சொல்வதற்கு ஆதாரங்களைக் காட்டமுடியாதவர்களாக நாம் வளர்ந்து கொண்டிருக்கி றோம்



என்பதை முதலில் புரிந்து கொள்ள முயலுங்கள்.

மனிதாபிமானம், மாறுபட்ட கருத்துக்கள் எதற்கும் இடமில்லாத நவீன காட்டுமிராண்டித்தனத்தை வளர்ப்பதில் நீங்களும் ஒரு குறிப்பிடத் தகுந்த பாத்திரத்தை ஆற்றியிருக்கிறீர்கள்.

புலிகள் இயக்கம் பற்றி பிரபல முற்போக்கு எழுத்தாளர் ஜெயகாந்தன் முன்பொரு சமயம் குறிப்பிடுகையில், "அவர்கள் இந்தியாவிற்கும் நண்பர்கள் இல்லை; தமிழர்களுக்கும் நண்பர்கள் இல்லை; தமக்கும் நண்பர்கள் இல்லை" என்றார். எவ்வளவு தீர்க்கதரிசனமிக்க கணிப்பீடு!

வெற்று வெறி உணர்ச்சிகளில் வளர்த்துவிடப்பட்டிருக்கும் புலிகள் இயக்கமாயை, மாத்தையாவின் மரண தண்டனைக்குப் பின்னாவது விலக வேண்டும். இல்லையேல் நீங்களும் நோயாளிகள் தான்.

முகந்தெரியாத உங்கள் தலைவருக்காக போர்க்களத்தில் மடிந்துகொண்டிருக்கும் புலிப் போராளிகளே! உங்கள் தலைவர் உங்கள்மீது என்ன பற்று வைத்திருக்கிறார் என்பதை இப்போதாவது தெரிந்து கொள்ளுங்கள்.

20 வருடங்களுக்கு மேலாக உங்கள் தலைவரோடு தோள்சேர நின்றவருக்கே இந்தியக் கைக்கூலி பட்டத்துடன் மரணதண்டனை பரிசளித்திருக்கிறார். நீங்கள் ஒவ்வொருவரும் எம்மாத்திரம்?

நீங்கள் கடவுள்பக்தி போன்று வைத்திருக்கும் மூடநம்பிக்கையில் களத்தில் மடிகிறீர்கள். ஆனால், உங்கள் தலைவரிடமோ எந்தவிதக் கருணையோ, மனிதாபிமான, மனிதப் பண்புகளோ கொஞ்சமும் கிடையாது. தமிழீழம் காணப் போவதாகச் சொல்லிக் கொண்டே வெறும் சுயகௌரவத்திற்காக சடலங்களைக் குவித்து அவ்வப்போதைய சொந்த வெற்றிக் களிப்புகளில் மிதந்து கொண்டிருக்கிறார்.

6000 பேர்வரை உங்களில் இறந்திருக்கிறீர்கள். அதன்மூலம் மக்களுக்கு எந்த ஆறுதலையாவது வழங்க முடிந்திருக்கிறதா? பின்னே யாருடைய சந்தோஷத்திற்காக மரணித்துக் கொண்டிருக்கிறீர்கள்?

உங்களுக்காக உங்கள் தலைவர் தனக்கு உயிராபத்து விளைவிக்கும் காரியங்களில் ஒருநாளும் இறங்கப் போவதில்லை. ஆனால், உங்களில் யார்மீதாவது சந்தேகமென்றால் உடனடியாகவே தொலைத்துக்கட்டிவிடுவார். பிரபாகரனைத் தவிர, மிச்சமீதியிருக்கும் எந்தத் தலைவரும் சுதந்திரமாகத் தமது அபிப்பிராயங்களை வெளியிட முடியாது. அவர்களுக்கும் அதேகதிதான்.

ஆகப்பெரிய சோகம் என்னவென்றால், மாவீரர்களுக்கென வடக்கில் ஆயிரக்கணக்கான நடுகற்கள் இருக்கின்றன. ஆனால், இலங்கை ராணுவத்திற்கெதிராகவும், இந்தியப் படைக்கெதிராகவும் முன்னணியில் நின்று செயற்பட்டவர் என இதுவரை புலிகளாலும், துதிபாடிகளாலும் பெருமிதமாகப் புகழப்பட்ட மாத்தையாவிற்கு ஒரு நடுகல் கூடக் கிடைக்காது.

புலிகள் இயக்கம் துரோகிகளுக்கென கட்டிய சமாதியில்தான் மாத்தையாவிற்கும் இடம். தான், துரோகிகளெனக் கொன்றவர்களுடன்தான் மாத்தையாவும் உறங்க வேண்டும். ●

# மட்டக்களப்பிலிருந்து செய்தி

## எழுதுவது பாண்டுபுத்திரன்

வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதா இல்லையா என்ற அபிப்பிராய வாக்கெடுப்பை இவ்வருடக் கடைசியில் நடத்துவதற்கு முன்னோடியாக கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை எப்படியும் நடத்தி முடிப்பது என்று அரசாங்கம் தீர்மானித்துவிட்டது. அரசாங்கத்துக்கு ஆதரவாக உள்ள தமிழ்க் கட்சிகளும் சொந்தப்பேரிலோ அல்லது சுயேட்சையாகவோ தேர்தலில் நின்று, அரசின் நோக்கத்துக்கு துணைபோய் தமிழ்மக்களுக்கு துரோகமிழைக்கும் பாதையில் இறங்கிவிட்டனர்.குடியேற்றப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இதே வாக்காளர் பட்டியலுடனேயே வடக்கு கிழக்கு இணைப்புக்கான அபிப்பிராய வாக்கெடுப்பும் நடத்தப்படப் போகிறது. தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் இதையும் மறைமுகமாக அங்கீகரித்துவிட்டார்கள்என்றுதான் சொல்லவேண்டும்.

நடைபெறப்போகும் உள்ளூராட்சித் தேர்தல், ராணுவம் கிழக்கைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டுவந்துவிட்டதென்றுதம்பட்டமடித்துக்கொள்ள, சகல பலாத்காரங்களையும் பிரயோகித்து நடத்தும் தேர்தலாகத்தான் அமைகிறது. பெரும்பாலான பிரதேச சபைகளுக்கு ராணுவம் நேரடியாகவே தனது சுயேட்சைக் குழுக்களை நிறுத்தியிருக்கிறது. பலஇடங்களில் அரசாங்கத்துக்குச் சார்பான தேர்தல் நடவடிக்கைகளை இப்போதிருந்தே படையினர் கவனித்துவருகிறார்கள். முற்றிலும் ராணுவமயப்படுத்தப்பட்ட ஒரு சூழ்நிலையிலேயே இத்தேர்தல் நடைபெற இருக்கிறது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான தெரிவுநிலை அத்தாட்சி உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டவர், யூ.என்.பி. கட்சியின் ஆதரவோடுவளர்ந்து இன்று அரசாங்க அதிபராகியிருக்கும் அதிகாரியாவார். வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்ளும் தேர்தலுக்கான ஆரம்பக்கட்டத்திலேயே இவர் தனது அரசஆதரவைப் பலவழிகளிலும் காட்டியுள்ளார். இராணுவத்தினரும் விசேட அதிரடிப் படையினரும் மிரட்டிக் கையெழுத்துப் போடச் செய்த நபர்களையெல்லாம் சுயேட்சைக் குழுக்களாகப் பதிவுசெய்துகொள்வதில் பெரிதும் அனுசரணையாக இருந்தார். (இப்போது இவரது உறவினராக இருக்கும் தமிழ்க்கட்சி ஒன்றின் தலைமை நிறுத்தியிருக்கும் சுயேட்சைக் குழுவை ஆதரிக்கச் சொல்லி இவர் மக்களைக் கேட்டு வருவதாக யூ.என்.பி. வட்டாரத்தில் புகைச்சல் கிளம்பியுள்ளது.)

❑ கிரான்குளம்-7 ஐச்சேர்ந்த சிதம்பரப்பிள்ளைஆறுமுகம்(39) விசேடஅதிரடிப்படையினரால் கடத்தப்பட்டு மண்முனைமேற்கு பிரதேசசபைக்கு யூ.என்.பி. பட்டியலில் போடப்பட்டுள்ளார்.

❑ கிரான்குளம்-6 ஐச்சேர்ந்த மாணிக்கம் பவானந்தராஜா (29) படையினரால் கடத்தப்பட்டு ஆரைப்பத்தை பிரதேச சபைக்கு யூ.என்.பி. பட்டியலில்.

❑ கிரான்குளம்-6 ஐச்சேர்ந்த சாமித்தம்பி விஸ்வநாதன் (26) படையினரால் கடத்தப்பட்டு ஆரைப்பத்தை பிரதேச சபைக்கு யூ.என்.பி. பட்டியலில்.

❑ சிவஞானம் அசிலேஸ்வரன் படையினரால் மிரட்டப்பட்டு பட்டிப்பளை பிரதேச சபைக்கு ராணுவ சுயேட்சைக் குழுவில் போடப்பட்டுள்ளார். தேர்தலிலிருந்து விலகவேண்டுமென்றும் இல்லையேல் கொலைசெய்யப்படுவீர் எனவும் இவரைப் பின்னர் புலிகள் மிரட்டிச் சென்றுள்ளனர்.

❑ முனைக்காட்டைச் சேர்ந்த செம்பாபோடி சண்முகத்தின் நிலைமை இன்னும் பரிதாபகரமானது. முதல்நாள் ஆமியோடு நிற்கும் பவளன் என்பவர் இவரை மிரட்டி ரூபா 20ஆயிரம் பறித்துள்ளார். அடுத்தநாள் அதே பவளன் ஆமியோடுவந்து இவரை மிரட்டி ஏற்றிச் சென்று பட்டிப்பளை பிரதேசசபைக்கு சுயேட்சைக் குழுவில் போட்டுள்ளனர்.

❑ புலிகள் என்று பிடித்து வைத்திருந்த ஆறுபேரையும் சிலரையும் ப.பிரபாகரன் தலைமையிலான சுயேட்சைக் குழுவாக வவுணதீவு பிரதேச சபைக்கு ராணுவத்தினர் நிறுத்தியுள்ளனர்.

இராணுவத்தினரின் சாதனைகள் ஒருபுறமிருக்க, தமிழ்க் கட்சி ஒன்றின் சுயேட்சைக்குழுவில்தற்சமயம் தமிழ்நாடு அகதிமுகாமிலிருக்கும் ஆறுமுகம் பஞ்சலிங்கம் என்பவர் பெயரில் போலிக் கையெழுத்து வைக்கப்பட்டு, போரதீவுப் பற்றுபிரதேசசபைக்கு அவரையும் வேட்பாளர் எனப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இதுதவிர, ஈழமக்கள்புரட்சிகர விடுதலை முன்னணியிலிருந்து, விலக்கப்பட்ட முன்னாள் உறுப்பினர்களான ஏழெட்டுப்பேரை ஈ.பி.டி.பி. தனது சுயேட்சைக் குழுவில் வேட்பாளர்களாகப் போட்டுள்ளது. அவர்களும் தாங்கள் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இலிருந்து விலகியதைச்சொல்லாமலே மழுப்பலாக மக்களிடம் வாக்குக் கேட்டுவருகின்றனர்.

கடைசியாகப் பகிடி ஒன்று. தன்னைப் பெரிய புத்திஜீவியாகக் காட்டிக் கொள்ள முயலும் முன்னாள் தமிழ் இயக்க பிரமுகர் ஒருவர், அந்த இயக்கத்தின் உட்கொலைகள் பலவற்றோடு சம்பந்தப்பட்டிருந்தவர், அந்தநேரத்து அசிங்கங்களையெல்லாம் யாரும் அறிந்திருக்க மாட்டார்கள் என்ற மிதப்பில் இப்போது தன்னை எழுத்துத் தரகராக்கிக்கொண்டிருப்பவர், கிழக்கில் யூ.என்.பி. யின் செல்வாக்கை உடைப்பதற்கு காமினிதலைமையிலான டி.யூ.என்.எஃப். ஐத் தான் மட்டக்களப்புக்குக் கொண்டு வரப்போவதாகச் சொன்னார். எனக்குச் சிரிப்பதைத் தவிர சொல்வதற்கு ஒன்றுமிருக்கவில்லை.

# பம்மாத்து....

...கள் பெரும்பான்மையாகஇருக்கும்வரையில் அதிகாரங்கள் அவர்களிடமேஇருக்கும். அச்சந்தர்ப்பத்தில், இவர்களால் தமது திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை நடாத்தமுடியாமல் போய்விடும். எனவேதான் வடக்குக்கிழக்கு இணைப்பு நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்பதை நாம் வலியுறுத்துகின்றோம்.

இவற்றைப்பற்றி எதுவித அக்கறையுமற்ற, இராணுவத்துடன் இணைந்து செயற்படும் சில தமிழ்க்குழுக்கள், தமிழ் மக்களைக் குழப்பவேண்டும் என்பதற்காகவே சில சுயேட்சைக் குழுக்களைக் கட்டாயப்படுத்தி இத்தேர்தலில் ஈடுபடுத்தியுள்ளன. பாராளுமன்றத்தில் அரசுக்கு சார்பாகவும், வெளியில் சிறீலங்கா இராணுவத்துடன் இணைந்து செயற்படும் இவர்கள், தாம் U.N.P.க்கு எதிரானவர்கள் என்று வெட்கமில்லாமல் கூற முற்படுகிறார்கள். தாம் ஏன் தேர்தலில் குதித்தோம் என்பதற்கு இவர்கள் கூறும் விளக்கங்கள்சிரிப்புக்குரியதாகவும்சிறுபிள்ளைத்தனமானதாகவுமே இருக்கின்றது.

ரெலோ, புளொட்டினால் உருவாக்கப்பட்டு மட்டக்களப்பு மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடும் சுயேட்சைக் குழு-2, மட்டக்களப்பு ரெலோ காரியாலயத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பின்வருமாறு கூறுகின்றது:

"இன்று வடக்குக் கிழக்கில் நிகழ்வது பயங்கரவாதப் பிரச்சினையா இனப் பிரச்சினையா என்ற கேள்விக்கு தகுந்த பதில் கொடுக்கும் களமாக எதிர்வரும் உள்ளூராட்சித்தேர்தலை மக்கள் பயன்படுத்தவேண்டும்.தமிழ்மக்களின்அழிக்க முடியாத தனித்துவத்தை பேணிப்பாதுகாப்பது நமது நிரந்தரநிலைப்பாடாகும். இந்த உறுதியோடும் லட்சியத்தோடும் அரசை துணிவோடு இந்தத் தேர்தல் களத்தில் சந்திக்கின்றோம். நாம் எந்தவொரு அரசியற்கட்சியினதும் அடிவருடிகள் அல்ல."

நாம் ஏற்கனவே கூறியவாறு ரெலோ, புளொட் இயக்கத்தினரால் உருவாக்கப்பட்ட சுயேட்சைக் குழுவில் வேட்பாளர்களாகப் போடப்பட்டிருக்கும் இவர்கள், இச்சுயேட்சைக் குழுவின் ஊடாகவே இம்மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். நாம் எந்த கட்சிகளினதும் அடிவருடிகள் அல்ல என்பதை ரெலோ காரியாலயத்திலிருந்துகொண்டு இவர்கள் கூறுகின்றார்கள். அது மாத்திரமல்லாமல், பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அரசுக்கும், அரச படையினருக்கும் சார்பாக இயங்கும் இவர்கள், அரசுக்கு எதிராக செயற்படுவதுபோல் காட்டிக் கொள்ள முனைவது வேடிக்கைக்குரியதாகும். குறைந்தபட்சம் பாராளுமன்றத்தில் மாதாமாதம் தமிழ் மக்களைத் தொடர்ந்து இம்சைப்படுத்துவதற்காகவேகொண்டுவரப்படும் அவசரகாலச் சட்டத்தை எதிர்க்க வக்கற்றவர்கள் U.N.P.க்குஎதிராக போட்டியிடுகின்றோம் என்பது மிகவும் கேலிக்குரியதாகும்.

மட்டக்களப்பு மாநகரசபைக்கு போட்டியிடும் 'சுயேட்சைக்குழு-3' பின்வருமாறு கூறுகின்றது:

"இன்று நமதுபகுதியில் நிலவும் சூழலில் தேர்தல் ஒன்று அவசியமில்லை. இந்தத் தேர்தலின் மூலம் தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகளால் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என்பதை நாம் நம்பவில்லை. ஆனால் மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடுவதாக நாம் மேற்கொண்ட முடிவு மிகவும் தூய்மையானதாகும். ஏனெனில் நாம் எமது அடையாளத்தை நிலைநிறுத்திக்கொள்ளும் முயற்சியில் இறங்கவேண்டியுள்ளது."

உண்மையில் இவர்கள் அடையாளம் என எதைக்குறிப்பிடுகின்றார்கள்? எதுவித அடையாளமும் இல்லாமல் சுயேட்சையாக போட்டியிடும் இவர்கள், எந்த அடையாளத்தை எந்த மக்களுக்காக காக்க முற்படுகின்றார்கள்?....ஈரோஸ் என்ற அடையாளத்தையா? அப்படியாயின், அப்படியான அடையாளம் இருக்கின்றதா என்பதை நாம் தீர ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஏற்கனவே பாலகுமார் தலைமையிலான ஈரோஸ் தாம் சுத்தமாக புலிகளுடன் கலந்துவிட்டதாக அறிக்கைவிட்டு,

தொடர்ச்சி 8ம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com



# எமது கட்சியும் மக்களும்

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இரண்டாவது காங்கிரஸ் (05-09 மாசி 1993) நிறைவேற்றிய அரசியல் திட்ட அறிக்கையிலிருந்து...

**11** 1983ம் ஆண்டு ஈழப் போராட்டத்தில் ஏற்பட்ட திடீர் ஆட்தொகை விரிவாக்கத்தினால் தோன்றிய பல குறைபாடுகள் எமது கட்சிக்குள்ளும் ஏற்பட்டதாயினும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது ஜனநாயக ரீதியான கோட்பாடுகளுக்கும், நாகரீகமான மானுடப் பண்புகளுக்கும், அரசியல் சித்தாந்த ரீதியான ஈடுபாடுகளுக்கும் தன்னை எந்தவொரு காலகட்டத்திலும் தவறாது ஈடுபடுத்திக் கொண்டது. இதனாலேயே எமது கட்சியானது, சொந்த உறுப்பினர்களையே படுகொலை செய்யும் அல்லது சித்திரவதை செய்யும் பழி எதற்கும் எந்தவொரு அளவிலும் ஆளாகாமல் இருந்ததற்குக் காரணமாகும்.

சொந்த உறுப்பினர்கள் மீதே உட்கொலைகளும், சித்திரவதைகளும் மலிந்த ஈழப்போராட்ட இயக்கங்களின் வரலாற்றில் அவ்வாறான பழி எதற்கும் ஆளாகாமைக்காக எமது கட்சியானது நெஞ்சை நிமிர்த்திப் பெருமைப்பட்டுக் கொள்ள முடியும்.

**12** ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது ஒவ்வொருகால கட்டத்திலும் தனது அடிப்படைக் கொள்கை நிலைப்பாடுகளை விட்டுக் கொடுக்காமலும், ஈழமக்களின் ஒட்டு மொத்த நலன்களை முன்வைத்துமே தனது அரசியல் நிலைப்பாடுகளை எடுத்து வந்திருக்கிறது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆயுதங்களுக்காகவோ, பணத்துக்காகவோ, அல்லது தன்னை மட்டுமே ஒரே பிரதிநிதியாக அங்கீகரிக்க வேண்டும் என்ற நோக்கம் கருதியோ நாம் எந்த சந்தர்ப்பத்திலும் யாருடனும் பேரம் பேசும் அரசியலில் ஈடுபட்டதோ அல்லது கண்மூடித்தனமாக நண்பர்கள் யார் எதிரிகள் யார் என்பதில் நிலைப்பாடில்லாமல் செயற்பட்டதோ இல்லை.

**13** 1981ம் ஆண்டு நடைபெற்ற கட்சியின் ஆரம்பமாநாடும், 1984ல்நடைபெற்ற முதலாவது கட்சிக் காங்கிரஸும் பத்து ஆண்டுகளைக் கடந்து நிற்கும் எமது கட்சியின் இதுவரை காலத்துக்குமான அரசியல் ரீதியான சிந்தனைகளையும், செயல்களையும் நெறிப்படுத்தியும் வழிப்படுத்தியும் வந்திருக்கின்றன. ஆனால், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இந்த இரண்டாவது காங்கிரஸ் முன்னெப்பொழுதும் இல்லாத வகையான, முற்றிலும் வேறுபட்ட நெருக்கடிச் சூழல்கள் மத்தியில் நடைபெறுகின்றது. அதேவேளை, பல்வேறுபட்ட அனுபவங்களின் பின்னணியில், குறிப்பாக இந்திய–இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுபவங்களின் பின்னணியில் நடைபெறுகின்றது. இந்த இரண்டாவது கட்சிக் காங்கிரஸ், மாறியிருக்கும் சூழல்களினதும் யதார்த்தங்களினதும் உண்மைகளைச் சரிவர அடையாளம் கண்டு உணர்ச்சிவயப்படாமலும், நிதானமாகவும், யதார்த்தபூர்வமாகவும், உறுதியாகவும் கட்சியின் எதிர்காலத்துக்குரிய சிந்தனைகளையும் செயல்களையும் தீர்மானிக்க வேண்டியுள்ளது.

**14 எமது மக்களும், மண்ணும்:**

இலங்கையில் சிங்கள மக்களுக்குச் சமமான உரிமைகளுடனும், உரிய பாதுகாப்புகளுடனும் தமிழ் மக்கள் வாழும் சூழ்நிலையை ஏற்படுத்தும் நோக்குடன் கடந்த நான்கு; ஐந்து, பத்து தசாப்தங்களுக்கு மேல் நீண்ட காலமாக சமாதான வழிகளில் போராடிக் களைத்துப் போனதன் காரணமாக, 1977ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது, தமிழ் மக்கள் பெரும்பான்மையானோர் தனியான சுதந்திர ஈழமே தமது ஜனநாயக அபிலாஷைகளுக்கான இறுதி முடிவு எனத் தமது வாக்குகளின்மூலம் வெளிப்படுத்தினர். இதன் காரணமாகவே, சிறீலங்கா அரசுக்கு எதிராக உக்கிரமுடன் போராடிய தமிழ் இளைஞர் அமைப்புக்களை வேறுபாடுகள் எதுவுமின்றி 'எங்கள் பொடியன்கள்' என்ற உரிமையுடன் மனமாரத் தமிழ் மக்கள் ஆதரித்தனர். போராட்டத்தின் விளைவாக ஏற்பட்ட அனைத்துத் துன்பங்களையும் துயரங்களையும் மக்கள் மனம் சளைக்காமல் தாங்கிக் கொண்டனர். அனைத்துப் போராட்ட அணிகளையும், தமது போராட்டத்துக்கான ஒரே இராணுவத்தின் வெவ்வேறு பிரிவுகளாகவே கருதிக் கொண்டனர். அந்த அணிகள் ஒவ்வொன்றிலும் தமது பிள்ளைகள் சேர்ந்து செயற்படுவதைக் கண்டு பெருமையோடு ஏற்றுக்கொண்டனர். அரசுக்கு எதிரான போராட்டத்தில் தமது பிள்ளைகள் தியாக மரணங்களைத் தழுவிக் கொண்டபோது, அவை கண்டு அவர்களது மனங்கள் ஒருபுறம் கவலைகளைச் சுமந்தனவாயினும் மறுபுறம் பெருமையான உணர்வுகளையும் கொண்டன.

**15** ஆனால், 1986ம் ஆண்டு புலிகள் 'ரெலோ' அமைப்பின் மீது திடீர்த் தாக்குதலை நடாத்தி பெருந்தொகையான படுகொலைகளைக் காட்டுமிராண்டித்தனமாக மேற்கொண்டதைத் தொடர்ந்து, எமது மக்கள் மனதில் ஈழப்போராட்டம் தொடர்பாக அதுவரை நிலவிவந்த உணர்வுகளெல்லாம் தலைகீழாக மாறிப்போயின. புலிகளை மட்டும் ஆதரித்துக் கொண்டிருந்தவர்களில் ஒருபகுதியினர், புலிகளின் இந்தப் படுகொலைகளைக் கண்டு, எல்லாவற்றையும் மீறிக்கொண்டு இராணுவ அதிகாரம் தங்கள் கைகளுக்கு வந்துவிட்டது என்ற கோரமான எண்ணங்களுடன் புலிகளுக்கு 'கொக்கா கோலா' குளிர்பானமும் கோழி இறைச்சிக் கறியும் படைத்தனர். பெரும்பான்மையான பெற்றோர்களோ, இவைகண்டு மனக்கிலேசம் கொண்டு செய்வதென்னவென்று அறியாது தவித்தனர். தமது பிள்ளைகளை எப்படியாவது, என்ன தந்திரம் பண்ணியாவது போராட்ட இயக்கங்களிலிருந்து பிரித்தெடுத்து, என்ன கஷ்டப்பட்டாவது மேலைத்தேய நாடுகளுக்கு அகதிகளாக அனுப்பிவிட வேண்டும் என்பதில் முழுமூச்சாக செயற்படத் தொடங்கினர். இயக்கங்கள் எவையோடும் தங்களை அடையாளம் காட்டிக் கொள்ளக்கூடாது என்பதில் மிகவும் அவதானத்தோடும் கவனத்தோடும் செயற்படத் தொடங்கினர். பரந்துபட்ட தமிழ்மக்களில் பெரும்பான்மையானோர் சுதந்திர ஈழம் பற்றிய தமது கனவுகளை மறந்து, தாம் மிகவும் அடிப்படையான ஜனநாயக உரிமைகளோடு சமாதானமும் அமைதியுமான சூழலில் வாழுவதற்கான நிலைமைகள் மட்டும் ஏற்பட்டால் போதும் என்ற நிலைக்கு வந்தனர்.

**16** 1987ல் இந்திய–இலங்கை சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டபோது, தமிழ் மக்கள் அதனை முழுமனதோடு வரவேற்றனர். அதனோடு தொடர்பா வந்த இந்திய அமைதிகாக்கும் படையின ரை பொட்டு வைத்து மாலையிட்டு வரவேற்றனர். ஆனால், ஒருசில மாதா களுக்குள்ளேயே இந்தியஅமைதிகாக்கு படையினருக்கும் புலிகளுக்குமிடையே மோதல் ஏற்பட்டதைத் தொடர்ந்து தமிழ் மக்கள் மீண்டும் குழப்ப நிலைமை களுக்குள் உள்ளாக்கப்பட்டனர். என்ன நடந்தாலும் சரி, ஏற்படும் துன்பங்க ளைத் தாங்கிக்கொண்டு வாய்மூடி மௌனிகளாக இருப்பதே தமக்கு நல் லது என்ற அடிப்படையில் நடமாடத் தொடங்கினர்.

இந்தியப் படையினரினதும், புலிகள் னதும், புலி ஆதரவாளர்களினதும் குரல்கள்மட்டுமே எமதுமண்ணிலிருந்து வெளிப்பட்டன. எமது மக்களின் உண்மையான எண்ணங்களை, அபிப்பிராயங்களை யாருமே அறிய முடியாத நிலைமை ஏற்பட்டது. இதனைத் தங்களுக்கு சாதகமாக்கிப் பயன்படுத்திக் கொண்ட புலிகள், தமது அபிப்பிராயங்களை தமது உறுதியான ஆதரவாளர்களின் ஊடாக ஈழத் தமிழர்களின் அபிப்பிராயங்கள் என வெளியிட்டனர்.

உண்மையில் தமிழ் மக்கள் சரியான தலைமையற்ற, உண்மையான பிரதிநிதிகள் அற்ற நிலைமையில் இருந்து வந்தனர். கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள், சமூகவிரோதிகள், தமக்கு ஒரு நாற்பது பேரை அடியாட்களாகக் கொண்டவர்கள் ஆகியோரெல்லாம், தாமே தமிழ் மக்களின் தனிப் பிரதிநிதிகளென்று தம்மைத்தாமே பிரகடனப்படுத்திக் கொண்டு, தாம் விரும்பியவாறெல்லாம் செயற்பட்டுக் கொண்டிருந்தனர்.

(வரும்)

## யாழ்ப்பாணத்திலிருந்து செய்தி எழுதுவது

### –அன்பு நிலா

மார்கழி மாதத்தில் விமானக் குண்டு வீச்சு மற்றும் ஷெல் தாக்குதல்களினால் 41 பேர் பலியாயினர், காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 140.

தைமாதம் – நெடுங்கேணியில் விமானத் தாக்குதல். கூட்டுறவுச்சங்கத் தலைவர் மங்கள ஜெகநாதனும், அவரது மனைவியும் பலி. அவர்களது மூன்று மகள்களும் பலத்த காயம்.

தொடர்ச்சியான குண்டுவீச்சுத்தாக்குதல்கள் காரணமாய் பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து கோயில்கள், கல்லூரி மண்டபங்களில் அகதிகளாக உள்ளனர். வெள்ளப் பெருக்கினாலும் பல்லாயிரக் கணக்கானமக்கள் இடம்பெயர்ந்துஅகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

தெருக்களிலெல்லாம் சின்னச்சின்ன குளங்கள் உருவாகியிருப்பதால் யாழ்ப்பாணம் எக்கச்சக்க ஏரிகளைக்கொண்ட நகரமாக ஆகியிருக்கிறது.

அரசாங்கம் பாவனைப் பொருட்களுக்குத் தடைபோடுவதால், புலிகளுக்கு எந்தப் பாதிப்பும் இருப்பதாகத் தெரியவில்லை; மக்கள்தான் கியூக்களில் நின்று பொருட்கள் கிடைக்காமல் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்; புலிகளிடம் அனுமதி பெற்ற சாமான்கள் கடத்தும் வியாபாரிகள் இவ்வாய்ப்பினால் கொள்ளை லாபமடைகிறார்கள். சென்ற மாதம் படகு தயாரிப்புக்கு உதவும் மூலப் பொருட்கள் ஒரு லொறியில் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளது.

பற்றரிகளுக்குத் தடை விதித்திருக்கிறது அரசாங்கம். ஆனால், புலிகள் தங்கள் தேவைக்கு மிஞ்சிய பற்றரிகளைக் கடைகளில்போட்டு விற்கிறார்கள். ஒரு டோச் பற்றரி விலை 75 ரூபா. மண்



ணெண்ணெய்யும், அதிகவிலையாயிருந்தாலும் வீதியோரக்கடைகளில் கிடைக்கிறது (புலிகள் பாவனைக்கு மேலதிகமாகஉள்ளபொருட்கள்தான் கடைகளில் விற்பனைக்கு வரும்). தவிரவும், புலிகளின் வாகனங்கள் டீசலிலேயே ஓடுகின்றன.

கடந்த ஆறு மாதங்களாக மாத்தையாபற்றி யாருக்கும்எதுவும் தெரியாது. புலிகளின்தலைவர் பிரபாகரன் ஆதரவாளர்களை அழைத்து விசேடமாக மாத்தையா மீதான குற்றச்சாட்டுகளை விவரித்துவருவதால், மாத்தையா ஏற்கனவே போடப்பட்டிருக்கக்கூடும் என்று சனங்கள் பேசிக் கொள்கிறார்கள்.

பூநகரிதாக்குதலில் கால்,கை இழந்த காயம்பட்ட ஏராளம் சிறுவர்கள் யாழ்-ஆஸ்பத்திரியில் உள்ளனர். புலிகளின் அரசியல்பொறுப்பாளர் தமிழ்செல்வன் என்கிற தினேஷும் பூநகரித் தாக்குதலில் கால்கள் இரண்டும் பழுதடைந்தநிலையில்ஆஸ்பத்திரியில்உள்ளார்.

பழைய அரசியல் பொறுப்பாளர் யோகியை தெருவில் காணமுடிகிறது. பழைய பந்தாக்களெல்லாம் பறிபோன நிலையில் தெருவில் காண்போரையெல்லாம் பார்த்து சினேகமாய்ச் சிரித்துவிட்டு நடந்து செல்வதைப் பார்க்க முடிகிறது. மாணவர்களுக்கு ரியூஷன் சொல்லிக் கொடுத்து தன் பிழைப்பைக் கவனித்துக் கொள்கிறார். எந்நேரமும் மெய்ப்பாதுகாவலர்கள் புடைசூழ காரில் வட்டமடித்துத் திரிந்த யோகியாரின் பழைய நாட்களை நினைத்துப் பரிதாபப்படவும் முடியாதவாறு சனங்களுக்குப் பயம்.

கடந்த இரண்டு மாதங்களாய் புலிகளின் மத்திய கமிட்டி கூடவில்லையாம் என்ற விஷயமும் எப்படியோ சனங்கள் பேசிக்கொள்ளும் விஷயமாகியிருக்கிறது. அடுத்து, அன்ரன் பாலசிங்கம் தெருவுக்கு வருவாரா, அல்லது அடேலுடன் பத்திரமாய் லண்டன் போய்ச் சேர்ந்துவிடுவாரா என்றொரு குசுகுசுப்பும் உலவுகிறது.



படிப்பகம்

# உளறு வாயன்



## உளறுவாயனின் தர்ம நியாயங்கள் யாருக்கு இங்கே புரியப் போகிறது?

**"இவன் ஒரு முட்டாளோ என்று நாலுபேர் சந்தேகப்பட்டாலும் பரவா யில்லை. வாயைத் திறக்காமல் இருப்பதே மேல் – வாயைத் திறந்து, அந்த சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்வதைக் காட்டிலும்."**

**– சிங்க்ளேர்**

சந்திரபாபு பாடினது போலை நானும் முட்டாள்தான் எண்டு ஒத்துக் கொள்ளுறதிலை எனக்கொண்டும் வெட்கமில்லை. சாப்பிடத் தவிர வேறை யொண்டுக்கும் வாய் திறக்கக்கூடா தெண்டு ஆயுதத்தைக் காட்டி வெருட்டி னாலும் சரி, நாசூக்காய் வெருட்டினா லும் சரி வாயைமூடிக்கொண்டு பேசா மலிருக்கிறது என்னட்டை நடக்காது. என்ரை அபிப்பிராயங்களைச் சொல்ல எனக்கிருக்கிற உரிமையை நான் எதுக்கு விட்டுக் குடுக்கோணும்? ஓம்... ஆர் என்னத்தைச் சொன்னாலும், கதை கண்ட இடம்தான் எனக்குக் கயிலாயம்.

உள்ளூராட்சித் தேர்தல்கள் நடக் கப்போகுது. என்னதானெண்டாலும் எலக்ஷன் எண்டால் பறந்தோடி வருமே ஒரு சூடு, சுதி... அதையெல்லாம் இப்ப கனவிலும் காணேலாது. எங்கை துவக்குச் சூடு வரும் எங்கை பஸ் வெடிக்கும் எண்ட அலாரிப்புத்தான் இப்ப. முந்தியெண்டால் தெருவுக்குத் தெரு பரிவாரங்கள் புடைசூழ வேட் பாளர் வந்தாரெண்டால் கண்டவர் நிண்டவருக்கெல்லாம் கும்பிடென்ன, குசலங்களென்ன, போத்திலென்ன, சீலையென்ன..... சாய்! கையிலை நாலு புள்ளடிக்கு ஆக்களிருந்துதெண்டால் அந்தக் கவனிப்பென்ன மரியாதை யென்ன....

ஒவ்வொரு கூட்டமும் திருவிழா வெல்லோ அப்ப. கடைசிக் கூட்டத்தைக் கடற்கரை மைதானத்திலை போட்டால் கடைசித் திருவிழா தீர்த்தத்திருவிழா மாதிரித்தான். "எங்கள் ரத்தினம் துரை ரத்தினம் போடு புள்ளடி வீட்டுக்கு நேரை"யெண்டு காற்சட்டையைக் கையிலை பிடிச்சுக் கொண்டு மற்றக் கையாலை வளையம் உருட்டிக் கொண்டு ஓடேக்கையே பாடமாகிப் போன பாட்டெல்லோ அது. ம்.... அது ஒரு காலம் கண்டியளோ!....

இப்ப வேட்பாளர்களைப் பிடிக்கிற துக்கே கட்சியளெல்லாம் கிளித்தட்டு மறிக்க வேண்டிக்கிடக்கு. இவை லிஸ் டில போட்டால் அவை மண்டையில போடுவினம் எண்ட பயத்திலை பிரமு கர்மாரெல்லாம் ஓடி ஒளிச்சிட்டினம். லிஸ்டிலை போட்ட கனபேரை பயங்கர வெருட்டு வெருட்டித்தானாம் கையெ ழுத்துப் போட வைச்சிருக்கினம் எண்டு கேள்வி.

தமிழ்க் கட்சிமார் தங்கடை சுயேட் சைக் குழுக்களை நிப்பாட்ட இந்தப் பாடுபட்டால் ராணுவம் சும்மா இருக் குமே...? மங்கு மங்கெண்டு மாவிடிச்ச வருக்கு ரண்டு கொழுக்கட்டை எட்டி எட்டிப் பாத்தவருக்கு எட்டுக் கொழுக் கட்டையெண்டால் அவை ஓமாமே? புலியள் எண்டு முந்திப் பிடிச்சு வைச்சி ருந்து பிறகு கிழமைக்குக் கிழமை கையெழுத்துப் போட வாற ஆக்களைப் பிடிச்சு அவையும் சுயேட்சைக் குழுக்க ளாய் நிப்பாட்டியிருக்கினம். ராணுவம் துவக்கைக் காட்டி, எலக்ஷன்ல நில் எண்டு வெருட்ட, சிலர் பயந்துபோய்ப் பாதுகாப் புக்கு எம்பிமாரிட்டையும் ஓடிப் போயிருக்கினம்.

தமிழ்க் கட்சிக்காரர் ஒருத்தர் பரிதாப மாய்ச் சொன்னார். தாங்கள் லிஸ்டில போட எண்டு கேக்கப்போன தன்ரை சொந்தக்கார ஆள் ஒருத்தரை, அதுக்கு முந்தியே எஸ்.ரி.எவ். போய் வெருட்டி தங்கடை லிஸ்டில போட்டுட்டுதெண்டு.

இப்பிடி, ராணுவம் கிழக்கிலும் வவு னியாவிலும் தங்கடை 'ஏரியாக் கிளியர்' சாதனையைக் காட்டுறதிலை மும்முர மாயிருக்கு. கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தவும் ஆமியிட்டைப் பெமிஷன் எடுக்க வேணும். றோட்டுக்கு றோட் செக்கிங், பாஸ் எண்டு ஆமி இந்த எலக்ஷனை வெற்றியாய் நடத்திப் போட் டுதெண்டால் பிறகு வடக்கு கிழக்கைப் பிரிக்கிறதுக்கு கிழக்கிலை எலக்ஷனை நடத்திப் போடலாமெண்டு பாக்கினம் போலை.

நடக்கிற எலக்ஷனிலை எந்தத் தமிழ்க் கட்சிக்கும் உடன்பாடு இல்லை எண்டு வலுகிளியராய்ச்சொல்லுகினம்.ஆனால், நாலு தமிழ்க்கட்சியள் அடிச்சுப் பிடிச் சுச் சுயேட்சைக் குழுக்களை நிப்பாட்டி யிருக்கினம். யூ.என்.பி. யை வெல்லவிடக் கூடாதாம்....! எலக்ஷன் நடக்கிறதே அரசாங்கத்தின்ரை நோக்கத்துக்கு வெற்றிதானே. தமிழ்க் கட்சியள் எந்தத் துண்டைப் போட்டாலும் ஓடிவருவினம் எண்டுதானே அரசாங்கம் இதிலை திமிரேத்திக் கொள்ளும்.

என்னமோ என்ரை வாயைச் சும்மா வைச்சிருக்கேலாமல் சொன்னன். மற்ற படி...ஓமோம், நாட்டில ஜனநாயக நீரோட்டம் ஓடவேணுமெண்டுதான் எனக்கும் விருப்பம். ஆனால், பேய னாக்க விட்டாலும் வேறென்னமோ ஆக்க விட்டுடக்கூடாது எண்ணுவினம். அதிலை கவனமாயிருக்க வேணும். அதுக்கு, தமிழ் மக்களின்ரை நன்மை எண்ட அடிப்படையிலை கட்சியளுக் குள்ளை பரஸ்பர புரிஞ்சுகொள்ளல் ஏற்படவேணும்...ம்...இதெல்லாம்உடனை நடக்கிற அலுவலே? காலம்தான் பதில் சொல்ல வேணும்.

தாண்டிக்குளத்துக்கு இஞ்சாலை இருந்தாலும் புலியொரு பாகமாயிருக்கி றவைக்கு, நாய்க்கு எங்கை கல்லுப் பட்டாலும் பின்னங்காலைத் தூக்கிக் கொண்டோடுற மாதிரி, எந்தமாதிரி நிலைமையிலும் புலியளுக்கு மாற்றாய் இருக்கிற தமிழ்க் கட்சியளோடை சொறி ராத்தாட்டில் பத்தியமில்லை. மாகாண சபை எலக்சனும் இந்தியன்ஆமி கொண் ரோலிலைதானே நடந்தது. இந்த எலக்சனை நிராகரிக்கிறவை அதிலை போட்டியிட்டவைதானே எண்டொரு சிராய்க் கதை விடுகினம்.



புலியளுக்கும் ஜனநாயகத்துக்கும் எப்பிடியாவது முடிச்சுப் போட்டுக் காட்டுவம் எண்டு வெளிக்கிடுறமாதிரித் தான் இந்த உள்ளூராட்சித் தேர்த லுக்கும் மாகாணசபைத் தேர்தலுக்கும் முடிச்சுப்போட வெளிக்கிடுறதும். தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை வைச்சுப் போட்டு நடந்த அந்தத் தேர்தலுக்கும் இந்த உள்ளூராட்சித் தேர்தலின்ரை நோக்கத்துக்கும் இருக்கிற வித்தியாசத் தை அவை விளங்காமலில்லை. அந் தந்த மண்டையளுக்குள்ளை ஒளிச்சி ருக்கிற புலிக் குணத்தின்ரை சேட்டை அது. துரோகியள் பட்டியல்லை பிடி பட்டு புலிச் சிறைக்குள்ளை ஆரும் இருந்து பாத்திருக்கிறியளோ? பெரி யவை செய்ய வேண்டியதையெல்லாம் செய்து விசாரணையை முடிச்சு அறை யிலை போட்ட பிறகு, தண்ணி வைக்க சாப்பாடு வைக்க எண்டு குறுக்க மறுக்கை போய்வாற பொடிப்பிள்ளை யளும் போகேக்கை வரேக்கை துவக்குப் பிடியாலையோ பின்னங்காலாலையோ ஒரு உதை விட்டிட்டுப் போவினம்.... அந்தமாதிரித்தான், என்னத்தை எழு திக்கொண்டு போகேக்கையும் இடை யிலை மாகாணசபையை இழுத்து ஒரு எத்து எத்தாட்டில் சிலருக்குப் பத்திய மில்லை.

மாகாணசபையைப் பற்றி முழுசாய் அபிப்பிராயம் என்னத்தையாவது எழு திச்சினமெண்டாலும் பரவாயில்லை. சரியோ பிழையோ எண்டு என்னை மாதிரிச் சாமானியன்கள் எதையாவது விளங்கிக் கொள்ளவாவது செய்யலாம். இதென்னெண்டால், போறபோக்கிலை சும்மா நொட்டிப்போட்டுப் போறவை யிட்டை என்னத்தைக் கண்டுகொள்ளு றது? வலு கெட்டித்தனமாய் புலியளைத் தாங்கிக் கொள்ளுகினமெண்டதுதான் தெரியுது.

பாத்தியளே, இந்த மாத்தையாவுக்கு வந்த சோதினையை! தலைவர் சொல் லிப்போட்டார், இந்தியா பொறுக்கி யெடுத்த ஏஜெண்டுதான் மாத்தையா வும் எண்டு. இனியென்ன, பிரச்சாரம், சூழ்நிலை எல்லாத்தையும் பொறுத்து மண்டையிலை போடவேண்டியதுதான். இந்தியக்கைக்கூலியளைப் பற்றி இவ்வ ளவுநாளும் மாத்தையா கதைக்காத கதையே...! தலைமறைவுத் தலைவருக் குப் பிரச்சினை இல்லை. தன்னைத் தவிர மற்ற எவரையும் துரோகி எண்டு சொல்லிப் போடலாம். வெளியிலை காவடி தூக்கிறவைக்குத்தான் கஷ்டமாய் இருக்கப்போகுது.....

'றோ'வின்ரை சதிக்கு உடந்தையா யிருந்தார் எண்டும், பிரபாகரனையும் தலைமையையும் ஒழிச்சுப்போட்டு புதிய தலைமை ஒண்டை ஏற்படுத்துறதும், பிறகு இந்தியா–இலங்கை கூட்டுற வோடை பிரதேச சுயாட்சி கொண்ட அரசியலமைப்பு ஒண்டை வடக்கு கிழக் குக்கு ஏற்படுத்துறதும் மாத்தையாவின் ரை குறிக்கோள் எண்டு தலைவர் வெளியிட்டிருக்கிற பத்துப் பக்க குற்றப் பத்திரிகை சொல்லுது.

குற்றப்பத்திரிகையிலை சொல்லியி ருக்கிறது உண்மையெண்டால், அநி யாயச் சாவுகளாலை சலிப்படைஞ்சு போன புலியளிலை ஒரு பகுதியின்ரை போக்கை முளையிலேயே கிள்ளிப் பயப் பிடுத்திவிடுற வேலைதான் மாத்தையா வுக்குத் தண்டனை எண்ட தலைவரின் நடவடிக்கைக்குக் காரணமாயிருக் கோணும். தன்ரை விருப்பங்களுக்கு மாறாய் உள்ளுக்கை ஆரும் யோசிச் சாலே என்ன நடக்குமெண்டதை தலை வர் நெத்தியடி அடிச்சமாதிரிச் சொல் லிப் போட்டார். பாலசிங்கத்தாருக்குத் தான் சிலவேளை இப்ப குலைப்பனாக் கியிருக்கும். மறந்தும் இனி அந்தாள் தீர்வைப் பற்றிக் கதைக்காது. தம்பிக்குத் தெரியாத தீர்வே? "அரசியல் கதைக்கிறவை நான் என்ன சொல்லு றன் எண்டு பாத்துத் திருப்பிச் சொல் லுங்கோ. வேறையொண்டையும்யோசிக் காமல் அடிபட்டுச் சாக ரெடியாயிருக் கிறவை பயமில்லாமல் என்னோடை நில்லுங்கோ" எண்டதுதான் இத்தால் சகலமானவைக்கும் தம்பி உணர்த்தி யிருக்கிற பாடம்.

புலிகளின் தாகம் புனிதத் தமிழீழம்! சாத்தான்ரை பழத்தைக் கடிச்சதாலை பிறந்த பாவப்பட்ட மனித ஜீவராசிகள் எதுவும் அந்த ராச்சியத்திலை உய்ய லாலா....சே! உய்யேலாது. அதாவது வாழேலாது, வாழ விடமாட்டினம். ஒருபக்கம் வரிசையாய் மாவீரர் சமாதி; மற்றப்பக்கம் நீளத்துக்குத் துரோகிகளின் புதைகுழிகள்....ச்சாய்! வரப்போற தமி ழீழம் வடிவாய்த்தானிருக்கும் என்ன?

இங்லீஷ் பேப்பர் ஒண்டிலை பாது காப்புத்துறைக் கட்டுரைப் பகுதியிலை சில முக்கியஸ்தர்கள் அரசாங்கத்துக்கு அனுப்பிவைச்சிருக்கும் இனப்பிரச்சி னைக்கான தீர்வுத் திட்டம் ஒண்டைப் பற்றி எழுதியிருக்கினம். முறையான அதிகாரப் பகிர்வும், வடக்கு–கிழக்கு இணைப்பும்தான் முக்கிய விஷயங்கள்



**"இந்தியக் கூலிகள் ஆயுதங்களை ஒப்படைக்கவில்லை என்றால் நாங்கள் அவர்களைக் கவனித்துக் கொள்வோம்."**

*மாத்தையா*
*தலைவர், வி.பு.ம.மு.*

நன்றி: இந்தியா டுடே (21.01.90)

எண்டும், அவற்றில் தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தக்கூடிய அரசியல் தீர்வொண்டைக் காணோணுமெண்டு அவை வலியுறுத்தியிருக்கினம். அதிகா ரப் பகிர்வைப் பொறுத்தமட்டில் இந் திய மாநிலங்களுக்கு உள்ளது போலை யும், வடக்கு கிழக்கை இணைச்சு, ஆனால் எல்லையை வரையறுத்துக் கொள்ளுறதிலை ரண்டு பகுதியும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரலாமெண்டும் அவை சொல்லியிருக்கினம்.

கொஞ்சம் யதார்த்தமாய்ச் சிந்திச்சி ருக்கினம் எண்டது ஒருபக்கமிருக்க, இந்தமாதிரிக் கதையள் இப்ப அங்கங் கை நிறைய வெளிக்கிடுதெண்டதும் தெரியுது.

வெளிநாட்டமைச்சு செயலாளராயி ருக்கும் பெர்னாட் திலகரட்ணாவை பழையபடி டெல்லித் தூதுவராய் அனுப்பப் போகினமாம். இவர் இந் திய–இலங்கை ஒப்பந்தக் காலத்திலை டெல்லியிலை தூதுவராய் இருந்தவர். பிறகு வெளிநாட்டமைச்சுச் செயலாள ராய் புறமோஷனிலை வந்தவர். இப்ப அங்கையிருக்கிற நெவில் கனகரட்ணா வைக் கூப்பிட்டுட்டு இவரையே திரும் பவும் தூதுவராய் அனுப்புகினம். உள் ளாலை என்ன ஓட்டங்கள் ஓடுதெண்டு தெரியேல்லை. விளைஞ்சால் சந்தைக்கு வரத்தானே வேணும். அடுத்தமுறை பாப்பம்.

www.padippakam.com

www.padippakam.com



# "தீர்வைச் சொல்ல வக்கில்லை தேர்தல் நடத்தும் நோக்கமென்ன?"

**செயலாளர் நாயகம்**
**தோழர் சுரேஷ் பிரேமச்சந்திரன்**

(பாராளுமன்ற உரையில்)



கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடாத்துவதற்கான சூழ்நிலை இல்லை; அங்கே தேர்தல் நடாத்தமுடியாது; தேர்தல் நடாத்தினால் பல்வேறுபட்ட துக்ககரமான சம்பவங்கள் நிகழும்; அது மாத்திரமல்ல; இந்த இனப் பிரச்சினைக்குச் சரியான ஒரு தீர்வைக் காணாமல் அங்கே தேர்தலை நடாத்தக் கூடாது என நாம் பல தடவைகள் கூறினோம். இல்லை தேர்தல் நடாத்துவதற்கான முழுமையான சூழ்நிலை கிழக்கு மாகாணத்தில் இருக்கின்றது; எந்தவித பிரச்சினையிம் இல்லை என மீண்டும் மீண்டும் அரச தரப்பினரால் வலியுறுத்தப்பட்டது.

நான் இங்கே சுட்டிக் காட்டுவது என்ன வென்றால் பிரதேச சபைகளுக்குப் போட்டியிட யு.என்.பி, க்கு ஆட்கள் இல்லாததால், தெருவில் திரிந்தோரை இராணுவத்தினரும் எஸ்.ரி.எப். இனரும் ஜீப்பில் கடத்திச் சென்று, அவர்களிடம் பலாத்காரமாக கையெழுத்து வேண்டி அவர்களுடைய பெயர்களை யு.என்.பி. யுடைய வேட்புமனுப் பட்டியலில் சேர்த்திருக்கிறார்கள். அதனால் ஏற்படக் கூடிய பிரச்சினை என்னவெனில், தங்கள் கிராமங்களுக்குத் திரும்பிப் போக முடியாத சூழ்நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். அங்கு திரும்பிப் போனால் கையெழுத்து வைத்ததற்காகப் புலிகள் அவர்களைக் கொலை செய்வார்கள். கையெழுத்து வைக்காததால் இராணுவம் என்னசெய்துவிடுமோஎன்ற அச்சத்தில் அவர்கள் சீவித்துக் கொண்டிருக்கிறார்கள்.அந்தவிடயத்தைத்தான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அது மாத்திரமல்ல, அங்கு இந்தத் தேர்தலில் பல நூற்றுக் கணக்கானோர் பங்குபற்றுகிறார்கள் என்ற ஒரு மாயையை உருவாக்குவதற்காக இராணுவத்தினரும், எஸ்.ரி.எப். உம் மாநகர சபையிலும் பல பிரதேசசபைகளிலும் பல சுயேட்சைக் குழுக்களைத் தாங்களாக நிறுத்தியுள்ளார்கள். இன்றிருக்கும் ரெலோ, புளொட் போன்ற அமைப்புக்கள் எவ்வாறு சுயேட்சைக் குழுக்களை உருவாக்கினவோ, அதே போன்று இராணுவத்தினரும் எஸ்.ரி.எப். இனரும் பலாத்காரமாக அங்கு சுயேட்சைக் குழுக்களை நிறுத்தியுள்ளார்கள் என்பதை நான் இந்த சபைக்குச் சுட்டிக் காட்ட வேண்டும்.

இந்த வகையில்தான் கிழக்கு மாகாணத் தேர்தல் நடைபெற இருக்கிறது. இந்த வள்ளலில்தான் இந்நாட்டில் ஜனநாயகம் இருக்கின்றது. அதை இங்கு சுட்டிக்காட்டும்போது ஆளுங்கட்சியினருக்குச் சுட்டுக்கொண்டு வருகிறது. அது ஏனென்று எனக்குப் புரியவில்லை.

அதாவது, வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும்போதே இவ்வளவு பிரச்சினைகள், இவ்வளவு துன்பதுயரங்கள், இவ்வளவு கேடுகள் நடக்கின்றன என்றால் தேர்தல் நடைபெறும்போது எவ்வளவு நடைபெறும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.


நான் இன்னும் சில விடயங்களை இந்தச்சபையின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும். முக்கியமாக, மட்டக்களப்பில் தேர்தல் நடக்கும் அதேசமயம், காரைதீவு பிரதேச சபை தரமுயர்த்தப்படாமல் அங்கும் தேர்தல் நடாத்தப்படவுள்ளது. ஆனால், காரைதீவு பிரதேச சபையைத் தரமுயர்த்தும்படி பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அமைச்சர்களுக்கும் கூறியும்கூட அங்கு எதுவுமே நடைபெறவில்லை.

அதுமாத்திரமல்ல: யாழ்ப்பாணத்தில் எப்படி ஒரு பொருளாதாரத்தடை நிலவுகிறதோ, அதேபோல் கிழக்கிலும் படுவான்கரை என்று சொல்லப்படும் கொக்கட்டிச்சோலைப் பிரதேசத்திற்கு மண்முனைத் துறையிலிருந்து அவர்கள் விரும்பிய பொருட்களைக் கொண்டு செல்ல முடியாது. ஒரு கிலோ சீனி, ஒரு கட்டிச் சவர்க்காரம், ஒரு போத்தல் தேங்காய் எண்ணெய்-இவ்வாறுதான் அவர்களும் கொண்டுபோக முடியும். ஒரு துறையிலிருந்து மறு துறையைக் கடந்து செல்பவர்கள் குறைந்த பட்சம் ஒரு கிழமைக்குத் தேவையான உணவுப் பண்டங்களைக்கூட அந்த படுவான்கரைப் பிரதேசத்திற்கு எடுத்துச் செல்ல முடியாத சூழ்நிலைதான் அங்கு நிலவுகிறது. ஆனால், அங்கொரு ஜனநாயக பூர்வமாக தேர்தலை நடாத்தலாமென்று அரசாங்கம் சொல்லுகின்றது.

அம்பாறை நகரத்தில் இருக்கக் கூடிய எண்பது தமிழ்க் குடும்பங்கள்- அம்பாறை நகரத்தைச் சுத்திகரித்து வந்த அந்த நகரசுத்தித் தொழிலாளர்கள்- 1990ம் ஆண்டில் ஏற்பட்ட கலவரங்களினால் அகதிகளாக்கப்பட்டு அங்கிருந்து வேறிடங்களுக்குச் சென்றார்கள். இன்று அவர்கள் அங்கிருந்து விரட்டப்பட்டு, வளத்தாப்பிட்டியில் அவர்களுக்கொரு மாதிரிக் கிராமம் கொடுக்கப்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையில் அவர்கள் இருந்த இடங்களிலிருந்து ஏன் அவர்கள் விரட்டப்பட்டுள்ளார்கள்? அவர்கள் ஏன் இன்னுமோரிடத்திற்கு-வளத்தாப்பிட்டிக்கு- விரட்டப்படுகிறார்கள்? அவர்கள் ஏற்கனவே இருந்த இடங்களில் அவர்களுக்கு ஏன் இடங்களை ஒதுக்கீடு செய்யக்கூடாது என்பதை நான் இந்தச் சபையில் கேட்க விரும்புகிறேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தனியாருக்குச் சொந்தமான 152 வீடுகளில் இராணுவத்தினர் இருக்கிறார்கள். இந்த வீடுகளில் இருந்த குடும்பங்கள் பல்வேறுபட்ட இடங்களிலும் திக்குத்திக்காக வாழ்ந்துகொண்டிருக்கின்றன. ஆனால், அதற்காக அவர்களுக்குச் சரியான வாடகை கொடுக்கப்படுவதுமில்லை; அவர்கள் மீண்டும் அங்கே போய்க் குடியேறுவதற்கான நிலமையுமில்லை. ஆகவே, பாதுகாப்பு அமைச்சு அந்த வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு அதற்கான சரியான வாடகையைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ●

# இதோ! குறுக்கெழுத்துப்போட்டி



## இடமிருந்து வலம்:

1. "எல்லாம் —." என்று கைகளை மேலே காட்டிவிட்டு வாளாவிருப்பர் சிலர். (6)
7. உஷ்ணம். அல்லது "மண்டையில் போடுதல்". (2)
8. ரெடி. (குழம்பியுள்ளது) (3)
9. ஒப்பிலா. (குழம்பி) (4)
10. கிட்டுச் சாவினால் பட்டுப் போன பரிதாப முனிவர். (2)
12. சர்வதேசப் பொலீஸ்காரன். (5)
14. மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும் என்று வாத்தியார் பாடினார். இங்கு இடையெழுத்து இல்லை. (2)
15. மத்தியகிழக்கு நாடு. (3)
16. காலில்லாக் கட்டில். (மாறியுள்ளது) (2)
18. தமிழீழத்தின் புதிய தேசத்துரோகி. (4)
20. "இங்கே இனப்பிரச்சினை இல்லை"- இவரே பிரச்சினையாகிப் போனார்.(5)

## மேலிருந்து கீழ்

1. தமிழர்கள் தங்களை மனிதர்களாய் நிரூபித்துக் கொள்ள எப்போதும் பொக்கற்றுக்குள் வைத்திருக்க வேண்டியது.(7)
2. அரவக் கொடியோன். (தலைகீழ்) (6)
3. போர். (2)
4. "காற்றிலேறியவ் விண்ணையுஞ் சாடுவோம் காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே" -அந்தக் கண்களுக்கு உவமை சொல்வர். (குழம்பியுள்ளது) (3)
5. எட்டுப் பேரோடு கெட்டுப்போன சாமியார். (சுருக்கமாய்க் குழம்பியுள்ளார்) (3)
6. யாரையும் எழுதவோ பேசவோ அனுமதிக்காதவர்கள் ஒருபக்கம் தேசத்தையும் மக்களையும் அழித்துக் கொண்டிருப்பார்கள். எழுத வாய்ப்புக் கிடைக்கும் இந்தப் பக்கத்தில், யார்யாரையெல்லாமோ திட்டிப் பத்திரிகாதர்மத்தை நிலைநாட்டிக் கொண்டிருப்பார்கள். எந்தப் பக்கமும் சாய்வில்லை என்று சொல்லும் இதற்குப் பெயர்—. (5)
7. அரசாங்கம் ஆயிரக்கணக்கான மனித உயிர்களைப் பாதுகாப்பாய் மண்ணுக்குள் புதைத்து வைத்திருந்தது. சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு இடம். (6)
11. இங்கே பேச்சு, எழுத்து என்பவற்றையெல்லாம் விடப் பலம் மிக்க ஆயுதம்; பேச்சு எழுத்தை நிறுத்தவும் சக்தி கொண்டது; கடவுளரும் கையாளாத பொருள்; இன்று எதிரி, நண்பன், சகபோராளி, தன்னின மக்கள் என்றெல்லாம் வேறுபாடு காட்டாமல் கடமையைச் செய்யும் அபேதவாதக் கருவி. (5)
13. தென்னையில் காய்ப்பது தேங்காய் என்றால், மாமரத்தில் என்ன மாதுளையா காய்க்கும்? (குழம்பியுள்ளது) (4)
17. பாவம் செய்தவன்/ள். (2)
19. பழங்கால வாத்தியம்-இன்று வாசிக்கக் கிடைக்காது. பாழும் போர் தொடர்வதனால் இங்கு வசிப்பதற்கும் முடியாது. (2)

## பம்மாத்து...

அவர்கள் புலிகளாகவேசெயற்பட்டுவருகின்றார்கள். கிழக்குமாகாண ஈரோஸ், தாம் ஈரோஸ் அல்ல,(E.D.F) கிழக்குப் பொருளாதாரநிறுவனமாக தாம்செயற்படுவதாக சில மாதங்களுக்கு முன் அறிக்கைவெளியிட்டிருந்தார்கள். மொத்தத்தில் ஈரோசை அவர்களே அழித்துவிட்டநிலையில் யாருடைய அடையாளத்தைக் காக்க இவர்கள் சுயேட்சையாகப் போட்டியிடுகின்றார்கள்?

இவற்றுக்கு மேலாக, இன்னுமொரு சிரிப்புக்குரிய விடயம் என்னவெனில் அரசாங்கத்தை ஆதரிப்பதில் கூட்டாகச் செயற்படும் இவர்கள், தேர்தலில் இக்கூட்டைத் தக்கவைத்துக்கொள்ள முடியாமைதான். மட்டக்களப்பில் ரெலோ, புளோட்டுடன் கூட்டாக தேர்தலில் பங்குபற்ற ஈ.பி.டி.பி.யும் இறுதிவரை முயற்சிசெய்தது. அவர்கள் கூட்டுக்கு மறுத்துவிடவே ஈ.பி.டி.பி. மிகவும் கவலைப்பட்டு ஒற்றுமையைக் குலைக்கக்கூடாது என்பதற்காக தாம் மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடவில்லையென அறிக்கை ஒன்றை வெளியிட்டனர். அதேசமயம், ஒற்றுமையைப் பற்றி எந்தவித கவலையும் இல்லாமல் ஒருசில பிரதேசசபைகளில் அவர்களுக்கெதிராக இவர்கள் போட்டியிடமுற்பட்டதானது இவர்களின் பொய்யான அறிக்கைகளை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது. உண்மையில் இவர்கள் சார்பில் மாநகரசபையிலோ, பிரதேசசபைகளிலோ எவரும் போட்டியிட முன்வரவில்லை. கட்சிக் கட்டுப்பாடுகளை மீறிய காரணங்களுக்காக வேறு இயக்கங்களிலிருந்து விரட்டப்பட்டவர்களை வைத்து இவர்கள் ஓரிரு பிரதேசசபைத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். அதுமாத்திரமல்லாமல், சென்னையில் அகதி முகாம்களில் இருப்பவர்களையும் இவர்கள் போரதீவுப்பற்று பிரதேசசபைத் தேர்தலில் இணைத்துள்ளார்கள். அவருக்கான கையொப்பத்தையும் களவாக இவர்களே வைத்துள்ளார்கள். மட்டுநகர் கச்சேரியில் தெரிவு அத்தாட்சி உத்தியோகத்தராக கடமையாற்றிய, யு.என்.பி. விசுவாசி மௌனகுருசாமியும் இதனை எந்தவித ஆட்சேபணையும் இல்லாமல் ஏற்றுள்ளார். மொத்தத்தில் வேட்புமனுத் தாக்கலே மிகவும் மோசடித்தனமாகவே நடந்துள்ளது. இம் மோசடியில் அரசு, அரச உத்தியோகத்தர், கட்சிகள் உட்பட சகலருக்கும் பங்குண்டு. இப்படியான தேர்தலில் வாக்களிக்குமாறுதான் இவர்கள் உங்களைக் கோருகின்றார்கள்.

வேட்பு மனுத்தாக்கலே இவ்வளவு மோசடித்தனமானதென்றால் தேர்தல் எப்படிஇருக்கும் என்று நாம் கூறித்தான் புரியவேண்டுமென்பதில்லை. 1981 இல் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் வாக்குப் பெட்டிகளையே திருடிச் சென்றவர்கள்தான் இவர்கள். வரப்போகின்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் இப்படியான காரியங்கள் நடக்கலாம். அதேசமயம் பெரும்பான்மை வாக்காளர்கள் கலந்துகொண்டார்கள் என்பதைக் காட்ட உங்களுக்கு பயமுறுத்தல்களும் மிரட்டல்களும் கூட இவர்களால் ஏற்படுத்தப்படும்.

**எனவே, நீங்கள் இத்தேர்தலை நிராகரிக்கின்றீர்கள் என்பதை எடுத்துக்காட்ட, வாக் குச்சாவடிகளுக்குச் சென்று உங்கள் வாக்குகளை பயனற்றதாக்கிவிடுவதுதான் நீங்கள் செய்யக்கூடிய ஒரே காரியம்.** ●

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF

படிப்பகம்

32, மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தை, கொழும்பு-7 க.பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC ...